உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-6 இதழ்-158

மார்ச் 16-31 2023



விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்

மனித கடமையை சிறப்பிக்கும் பஞ்ச மகாயக்ஞம்


e-magazine
www.aanmeegamalar.com
e-magazine
www.aanmeegamalar.com
e-magazine


## கலியுகத்திலும் அனுமன் வாசம் செய்யும் பஞ்சமுக ஆஞ்சநேய ஸ்வாமி கோவில்

# சிவனை தரிசிக்கும் கால நேர பலன்

| | |
|---|---|
| காலை | நோய்கள் நீங்கும். |
| நண்பகல் | தனம் பெருகும். |
| மாலையில் | பாவம் அகலும் |
| அர்த்த சாமம் | வீடுபேறு கிடைக்கும். |

# நடராஜர் உருவமும் அதன் தத்துவமும்



நடராஜரின் அமைப்பு ஒவ்வொரு விதத்தில் ஒவ்வொருவிதமாக காட்சி அளித்தாலும், நடராஜரின் ஒவ்வொரு பாகமும் ஒவ்வொரு ஆற்றலை குறிக்கும்.

அந்த வகையில்...

- ஒரு வலக்கையிலுள்ள உடுக்கை படைக்கும் ஆற்றலை குறிக்கும் (கீழிருக்கும் தாம ரையும் பிறப்பிற்கு வழிவகுக்குமென கூறுவர்)
- ஒரு இடக்கையிலுள்ள நெருப்பு அழிக்கும் ஆற்றலை குறிக்கும்.
- இன்னொரு வலக்கையின் உட்புறத்தை காட்டுவது அருளும் ஆற்றலை குறிக்கும்
- இன்னொரு இடக்கை துதிக்கை போல் உட்புறத்தினை மறைத்தவாறு இருப்பது மறைக்கும் ஆற்றலை குறிக்கும்
- தூக்கிய பாதமும் ஆணவத்தை மிதித்தாடும் இன்னொரு பாதமும் மனமாயை உட்பட தீய சக்திகளிலிருந்து காக்கும் ஆற்றலை குறிக்கும்...

# மலர்களை பயன்படுத்தும் காலங்கள்

ஒவ்வொரு மலரையும் ஒவ்வொரு காலங்களுக்கு பயன்படுத்தலாம், அதற்கு பின் அதை உரமாக செடி, கொடிகளுக்கு அல்லது இயற்கை மருத்துவத்திற்கு தேவையானவையாக மாற்றிவிட வேண்டும். அவ்வாறு ஒரு சில மலர்களை எத்தனை காலத்திற்கு பயன்படுத்தலாம் என்பதைப் பற்றி விரிவாக பார்ப்போம்.

தாமரை மலர் ...................... 7 நாட்கள்
அரளிமலர் .......................... 3 நாட்கள்
தாழம் பூ ............................ 5 நாட்கள்
செண்பகம் ............................... 1 நாள்
விஷ்னுகிரந்தி ..........................3 நாள்
வில்வ பத்திரம் ................ 6 மாதங்கள்
துளசி ............................. 3 மாதங்கள்

# நவகிரகங்களின் தந்தையர்

| | |
|---|---|
| கசியப்பரின் புதல்வர் | சூரியன் |
| அத்ரி மஹரிஷியின் புதல்வர் | சந்திரன் |
| ஈசனின் வியர்வை துளியில் பிறந்தவர் | செவ்வாய் |
| சந்திரனின் புதல்வர் | புதன் |
| ஆங்கிரச மஹரிஷியின் புதல்வர் | தேவகுருவுமாகிய பிரகஸ்பதி |
| பிருகுமுனிவரின் புதல்வர் | அசுரகுருவான சுக்ராச்சாரியார் |
| சூரிய புதல்வர் | சனீஸ்வரர் |
| அமிர்தம் உண்டதால் பிறந்தவர்கள் | ராகு, கேது |

இவர்கள் ஒன்பது பேரும் நவகிரகங்களாவர் ஒரு மனிதனின் கர்ம வினைகளுக்கு ஏற்றப்படி அவர்களுக்கு பலன்களை வழங்குகின்றனர்



## இயற்கையே கடவுள்

# பலாமரத்திற்கு திருப்பதிகம் பாடிய ஞானசம்பந்தர்

உலகில் உள்ள அனைத்தும் கடவுள், எங்கும் எதிலும் நிறைந்துள்ள இறைவனே அனைத்து உயிரினங்களின் வடிவில் காட்சி தருகிறான் என்ற மேலான சிந்தனையை கொண்டது இந்து மதம், நீயும் கடவுள் நானும் கடவுள்தான் என்று கூறுவதுடன் மட்டுமல்லாமல், கடவுளைத் தேடி அலையும் ஒவ்வொருவரின் செயலினால்தான் மனிதன், மிருகம், புனிதன், ஞானி, சித்தன், மகான் போன்ற நிலைகளில் மனிதன் பிரிந்து காட்சிதருகிறான் என்றும் மிக தெளிவாக கூறியுள்ளனர்.

மனிதர்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் தரப்படுகிறதோ, அதே அளவிற்கு மற்ற உயிரினங் களுக்கும் இந்து மதம் முக்கியத்துவம் தருகிறது,





அதனால்தான் சிலந்தி, பல்லி, யாளை, புலி, சிங்கம், எறும்பு, போன்ற ஓர் அறிவு முதல் ஐந்து அறிவு உள்ள விலங்குகள் வரை அனைத்தையும் இறைவனுடன் இணைத்து வணங்கியுள்ளனர்.

இதன் வரிசையில் உலக இயக்கத்திற்குகாரண மாக திகழும், உலகமே இயங்கும் ஆக்ஸிஜனை தந்து உலகை உயிர்ப்புடன் வைத்திருக்கும் இயற் கை நாயகர்களாக திகழும், மரம், செடி, கொடி போன்றவற்றையும் இறைவனுக்கு இணையாகவே வழிபட்டுள்ளனர் நமது முன்னோர்கள்.

துளசி, வில்வம், வேப்ப மரம், அரசமரம், போன்றவற்றை வணங்கியதுடன், ஒவ்வொரு ஸ்தலத்திற்கும் ஒவ்வொரு மரத்தை ஸ்தல விருட்சமாகவே போற்றி பாதுகாத்துளளனர்.

இதில் இன்னும் ஒரு படி மேலே சென்று இறைவனுக்கு இணையாக திருக்குற்றாலத் திருத் தலத்தின் தல விருக்ஷமாகிய குறும்பலாவிற்குத் தனியாக ஒரு திருப்பதிகம் திருஞானசம்பந்தப் பெருமானால் பாடப் பெற்றுள்ளது. வேறு எத் தலத்திலுள்ள தலவிருக்ஷமும் இத்தனை பெருமை இல்லை.

சைவ சமயத்தில் திருக்குற்றாலம், திருக்குறும் பலாவென இரண்டு திருத்தலங்கள் கொண்ட தனிப் பெருமையுடையதெனக் கூறுகிறார்கள்.

சிவபிரான் மாலாயிருந்த காலத்தில் ஈசான திக்கிலிருந்த கூத்தர் கோயிலை ஒரு தல மாகவும், சிவபிரான் வீற்றிருக்கும் குறும் பலா வினடியை மற்றொரு தலமாகவும் கொண்டு வழி பட்டுள்ளனர்.

இத்தலத்தில் இயற்கைக்கு கொடுத்த மிகப் பெரிய அங்கிகாரமே இத்தலக் குறும்பலா மரத்தினை இறைவனுக்கு இணையாக வணங்கி வழிபடுகின்றனர்.

இம்மரபும் இத்தலத்தின் சிறப்பையே வலி யுறுத்துகின்றது. கந்த புராணத்துள்ள ஆறு சங்கிதைகளுக்குள்ளே, 'சங்கர சங்கிதை'யிலும் 'சனற்குமார சங்கிதை'யிலும் திருக்குற்றாலத்தல மான்மியங் கூறப்பட்டிருக்கிறது.

இத்தலத்திலுள்ள இறைவன் பெயர் திருக் குற்றாலநாதர். பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் என்ற மூவர் பெயர் தாங்கிய மூன்று சிகரங்கள் உள்ளதால் குற்றாலமலை திரிகூட மலையென்றும் அழைக்கப்படுகிறது.

குற்றால நாதரைத் திரிகூடமலை வாசியான தால் திரிகூடநாதரென்றழைப்பதும் வழக்கம். இறைவியின் பெயர் குழல்வாய் மொழியம்மை. வேய்ங்குழலின் ஒலிபோன்று இனிமை பொருந்திய சொல்லையுடையவள் என்பது பொருள்.

ஒலி தத்துவத்தை உள்ளடக்கிய மேலாம் பரம்பொருள் என்றும் பொருள் கொள்ள லாம்.

திருக்குற்றாலமுடைய நாயனார், திருக்குற்றால முடைய தம்பிரானார், திருக்குற்றாலத்துப் பெரு மானடிகள், திருக்குற்றாலத்துஆழ்வார் என்று இறைவனுக்கு பல பெயர்கள் உள்ளன.

நாச்சியார், குழல்வாய் மொழி மங்கை, திருக்குற்றாலத்தாணு வேணுமொழிக் கவுரி, வேணுவாக் வாதினி என்று அம்பாளுக்கும் பல பெயர்கள் உள்ளதாக இக்கோயில் கல்வெட்டு களிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

உலகில் உள்ள அனைத்து சிவாலயங்களிலிலும் இல்லாத விஷேசம், இத்தலம் மட்டுமே இயற்கை யுடன் ஒன்றிஇருந்தாலும், ஒரு மரத்தை சிறப்பிக்கும் வகையில் இத்தல பலா மரத்திற்கென்று தனிப் பதிகம் இசைக்கப்படுகிறது.

# குண்டலினி சக்தி

உருத்தரித்த நாடியில்
ஒடுங்குகின்ற வாயுவைக்
கருத்தினால் இருத்தியே
கபாலம் ஏற்ற வல்லீரேல்
விருத்தரும் பாலராவர் மேனியும் சிவந்திடும்
அருட்டரித்த நாதர் பாதம்
அம்மை பாதம் உண்மையே

– சிவ வாக்கியர்.



“குண்டலினி அம்மா! மனிதனுள் ஜீவசக்தியாக இருப்பவளே! நீயே ஆதிசக்தி, ராஜராஜேஸ்வரி, திரிபுரசுந்தரி.

நீயே பிராணனாகவும், வித்யுத்(மின்) சக்தியாகவும், இன்னும் பலவித சக்திகளாகவும் இருந்து இந்த உடலுள் உறைகின்றாய் ஸுஷும்னா நாடியைத் திறக்க வைத்து ஆறு ஆதாரங்களையும் தாண்டி சகஸ்ராரம் சென்று உன் பதியுடன் இணையும்போது என்னையும் உன்னுடன் ஐக்கியப்படுத்திக் கொண்டுவிடு”

குண்டலினி சக்தி என்பது, எப்படி ஜீவாத்மா பரமாத்மா அம்சமோ, அப்படியே பராசக்தியின் அம்சமாக நம் சரீரத்தில் குண்டலினி சக்தி இருக்கிறாள். பிரும்மாண் டத்தில் நடக்கும் சகல காரியங்களுக்கும் சக்திகளின் சமஷ்டி ரூபிணியான திரிபுரசுந்தரி எப்படிக் காரணமாக இருக்கிறாளோ, அப்படியே குண்டலினி சக்தி நம்முடைய சரீர சம்பந்தமான சகல காரியங்களுக்கும் காரணமாக இருக்கிறாள். இதனாலேயே அம்பிகைக்கு மஹா குண்டலினி என்று ஒரு பெயர் உண்டு.

எப்படிச் சக்தியில்லாவிட்டால் சிவனே எதுவும் செய்ய முடியாதோ அதுபோலக் குண்டலினி இல்லா விட்டால் நம்மால் எதுவும் செய்ய முடியாது.



ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.com

# பூஜை செய்யும் வழிமுறைகள்

● நெற்றியில் திருநீறோ குங்குமமோ அல்லது திருமண்ணோ இல்லாமல் பூஜை செய்யக்கூடாது. காரணம் இவை இறை சின்னங்கள். இவை நம் மனதை ஒருமுகப்படுத்தி பூஜையில் ஈடுபட உதவும்.



● பூஜைப் பொருட்களில்பூக்களைத் தவிர மற்ற எல்லாவற்றையும் தண்ணீரில் அலம்பவேண்டும்.

● பூஜைக்குப் பயன்படும் மலர்கள் புழு அல்லது பூச்சியின் தாக்கத்திற்கு ஆளாகாததாக இருக்கவேண்டும். ஒரு வேளை அவை புழு,பூச்சி அரித்துக் காணப்படுமாயின் அவற்றை பூஜைக்குப்பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். அத்தோடு நல்ல மலர்களின் காம்புகளை ஆய்ந்து அவற்றில் தலைமுடியோ அல்லது வேறு பொருட்களோ இல்லாதவாறு சுத்தப்படுத்த வேண்டும்.

● பூஜைக்கு தேவையான பொருட்களை நினைவில் வைத்து முன்கூட்டியே சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டும். பூஜையின் போது பொருட்களை சேகரிப்பதைத் தவிருங்கள்.

● தீபம், மணி, வெற்றிலை, தேங்காய்,சங்கு, பழம். பூக்கள் இவற்றை வெறுந்தரையில் வைக்கக்கூடாது.

● பூஜைப் பொருட்களில் பூக்களைத்தவிர மற்ற எல்லாவற்றையும் தண்ணீரில் அலம்பவேண்டும்.

● பூஜை நடுவில் எழுந்தி போகக்கூடாது.

● மந்திரம் தவிர்ந்த வேறுபயனற்ற பேச்சுக்கள் எதையும் பூஜையின் போது பேசலாகாது. மனம், வாக்கு, காயம் இம் மூன்றாலும் இறைவனை இறைஞ்சி வணங்குங்கள்.



## மனித கடமையை சிறப்பிக்கும்

# பஞ்ச மகாயக்ஞம்



இல்லற வாழ்வில் ஈடுபடுபவன் அறவழியில் பணம் ஈட்டி, இல்லறத்தை நல்லறமாக நடத்தி, செய்ய வேண்டிய காரியங்களை சிறப்பாக செய்து முடிப்பதை "பஞ்ச மகாயக்ஞம்" என வேதத்தில் கூறப்பபட்டுள்ளது.

இந்த பஞ்ச மகாயக்ஞங்களை அவசியம் கடைபிடிக்க வேண்டும், இதை அவசியம் கடை பிடிக்க வேண்டும் என இந்து சமய வேத வேதாந்த சாத்திரங்கள் கூறுகிறது.

பஞ்ச மகா யக்ஞம் என்பதை விரிவாக பார்ப்போம்.

**தேவ யக்ஞம்:** வேத மந்திரங்கள் ஒதுவது, ஓதுவித்தல். வேதங்கள் ஓதி வேள்வி வளர்த்து தேவர்களை மகிழ்விப்பது.

**பிரம்ம / ரிஷி யக்ஞம்:** உப நிடதங்கள், பிரம்ம சூத்திரம், பகவத் கீதை, இதிகாசங்கள், திருமுறை, திருக்குறள் போன்ற மகான்களின் தெய்வீக நூல்களை கேட்டல், படித்தல் மற்றும் அவைகளை சிந்தித்தலே பிரம்ம யக்ஞம் அல்லது ரிஷி யக்ஞம் ஆகும்.

**பித்ரு யக்ஞம்:** நீத்தார் வழிபாட்டின் மூலம் நமது மூதாதையர்களுக்கு சிராத்தம், திதி, தர்ப்பணம் கொடுப்பதின் மூலம் அவர்களை மகிழ்விப்பது.

**மனுஸ்ய யக்ஞம்:** வீட்டிற்கு வரும் அதிதிகளுக்கு தங்க இடம் அளித்து, அமுது படைத்து விருந்தோம்புவது.

**பூத யக்ஞம்:** பசு, காகம் போன்ற விலங்குகளுக்கு உணவு வழங்குதல்.

# கலியுகத்திலும் அனுமன் வாசம் செய்யும் பஞ்சமுக ஆஞ்சநேய ஸ்வாமி கோவில்

## வேண்டுதலை நிறைவேற்றி, மன அமைதி தரும் அற்புத சூழலில் அமைந்த கோவில்

செங்கல்பட்டு மாவட்டம், குமிழி மதுரா மேட்டுப்பாளையம் கிராமத்தில் அமைந்துள்ளது பஞ்சமுக ஆஞ்சநேய ஸ்வாமி கோவில்.

இத்திருத்தலம் மிகுந்த அமைதியான சூழ் நிலையில், இயற்கை சூழ்நிலையில் பஞ்சமுக அனுமனை தரிசித்தால் மனதிற்கும், உடலுக்கும் புத்துணர்ச்சி தரும் விதத்தில் அமைந்துள்ளது பஞ்சமுக அனுமன் ஆலயம்.

ஆலயத்தை சுற்றி விவசாயம் செழித்துள்ளதால், எங்கும் பசுமையாக காட்சியளிக்கிறது.

இந்த ஆலயத்தில் இன்றும் அனுமன் வாசம் செய்வதாக கூறப்படுகிறது.

இதற்கு சாட்சியாக, அனுமனிடம் வேண்டுதல் வைத்தால் அது குறிப்பிட்ட நாட்களில் நடந்து முடிந்துவிடுகிறது, இதனால் பக்தர்கள் தங்கள் வேண்டுதலை நிறைவேற்றி செல்கின்றனர்.

இந்த பஞ்சமுக அனுமன் ஸ்வாமிதிருக்கோவில் அமைந்த வரலாறு மிகுந்த சுவாரஸ்யமானதாகும்.

இந்த ஊரில் வசிக்கும் விவசாயியான ஆதி கேசவன், இவருக்கு ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகம்.

இந்த ஊரில் அமைந்துள்ள மிகப்பழமையான பாதாள பிள்ளையார் கோவிலுக்கு மேற்கே அமைந்துள்ள கன்னி கோவிலுக்கு நிர்வாகியாக இருந்தார். தினமும் கன்னி கோவிலுக்கு சென்று வழிபாடு நடத்துவது இவரது வழக்கம்.

2011–ஆம் ஆண்டு ஒருநாள் சாலையில் ஒருவர் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது, எதிர் பாராத விதமாக ஓர் குரங்கின்மீது மோதியதில், குரங்கு அந்த இடத்திலேயே இறந்தது.

இதைப் பார்த்து மற்ற குரங்குகள் ஒன்று கூடி ஓலமிட்டு கண்ணீர் சிந்தி அழுதவண்ணம் இருந்தது, இக்காட்சி அக்கிராமத்தில் வசிக்கும் அனைவரையும் நெகிழச் செய்தது.

குரங்குகளின் இந்த பாசப் போராட்டத்தைப் பார்த்து ஊர் மக்கள் ஒன்றுகூடி இறந்த அக் குரங்கை மரியாதையுடன் நல்லடக்கம் செய்ய தீர்மானித்தனர்.

அதன்படி இக்கிராமத்தில் உள்ள பழமையான பாதாள விநாயகர் ஆலயத்தின் பக்கவாட்டில்







ஒரு பள்ளம் தோன்டி அக்குரங்கை புதைக்க எண்ணினர், ஆனால் அங்கு பாறை தென்படவே, வேறு ஒருஇடத்தில் பள்ளம் தோன்ட முடிவு செய்தனர், அங்கும் பாறை தென்பட்டது.

தொடர்ந்து இரண்டு, மூன்று இடங்களில் தோன்டியும் பாறை தென்படவே வேறு என்ன செய்வது என்று யோசித்த ஊர் பொது மக்கள், பாதாள விநாயகருக்கு சற்று தள்ளி அமைந்திருந்த ஸ்ரீகன்னிஅம்மன் ஆலயத்தின் பக்கவாட்டில், இறந்த குரங்கை அடக்கம் செய்யலாம் என்று முடிவு செய்தனர்.

இக்கோவிலின் நிர்வாகியின் சம்மதத்துடன், கன்னி கோவிலுக்கு அருகில் பள்ளம் தோன்டினர், எந்தவித சிரமமும் இன்றி, அதிகப்படியான முயற்சி இன்றி அங்கே எளிதாக பள்ளம் தோண்ட முடிந்தது, இறைவனின் சித்தம் இதுதான் என்று முடிவு செய்து இறந்த குரங்கிற்கு நாக கன்னி அம்மனின் பட்டுப்புடவையையும், அம்மனுக்கு சார்த்திய மலர்களையும் தூவி நல்லடக்கம் செய்தனர்.

அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் ஒரு வேப்ப மரத்தையும் நட்டு, செங்கல் ஒன்றையும் குரங்கு அடக்கம் செய்த இடத்தில் வைத்து அனுமனாக பாவித்து வணங்கி சென்றனர்.

ஸ்ரீ கன்னி அம்மன் கோவில் நிர்வாகி ஆதி கேசவன், அம்மனுக்கு அபிஷேகம் செய்யும்போது, குரங்கு அடக்கம் செய்த இடத்திற்கும் பூஜை செய்து வணங்கிவிட்டு செல்வதை வழக்கமாக கொண்டார்.

நாட்கள் மெல்ல வருடங்களா நகர்ந்து, மூன்று வருடங்கள் கடந்துவிட்டது.

ஒருநாள் இவ்வூருக்கு வந்த அந்தணர், ஸ்ரீ கன்னியம்மனை தரிசிக்க வந்துள்ளார், வழிபாடு முடிந்தவுடன், கோவில் நிர்வாகியிடம், "இந்த இடத்தில் அனுமன் வாசம் செய்வது நன்றாக உணர முடிகிறது" என்று கூறியுள்ளார்.



மேலும், "இந்த இடம் அனுமனுக்கு மிகவும் பிடித்த இடமாக இருப்பதுடன், தெய்வ சாந்நித்தியம் நிறைந்துள்ளது. கண்டிப்பாக இந்த இடத்தில் ஆஞ்சநேயருக்கு கோவில் கட்ட வேண்டும்" என்று கூறியுள்ளார்.

அந்தணரின் வார்த்தை, ஆதிகேசனுக்கு ஒருபக்கம் மகிழ்ச்சியாக இருந்தாலும், கோவில் கட்டுவது என்பது நம்மால் முடியுமா? மிகுந்த பணம் படைத்தவர்களே கோவில் கட்ட தயங்கும் இக்காலத்தில், குறைந்த வருவாய் கொண்டு குடும்பத்தை நடத்தும் என்னால் முடியுமா? என்று மறுபக்கம் தயக்கமும் தோன்றியுள்ளது.

கோவில் கட்ட முடியும், முடியாது என்ற இரு வேறு குழப்பம் மன ஓட்டத்தில் கலந்து ஒரு கட்டத்தில் சோர்வடைந்த ஆதிகேசவனுக்கு அனுமனே கோவில் கட்ட கட்டளை இடுவதைப் போன்று, இவரது கனவில் அனுமன் தோன்றி தனக்கு கோவில் கட்டுமாறுகூறியுள்ளார்.

அந்தணரின் வாக்கினை மெய்ப்பிப்பது போன்று அனுமனே கனவில் வந்து கட்டளை இட்டதால், ஆதிகேசவனின் மனம் தெளிவடைந்தது.

மனதில் ஒருவித புது நம்பிக்கை துளிர்விட்டு கண்டிப்பாக ஆஞ்சநேயருக்கு கோவில் கட்டியே தீருவோம் என்ற முடிவுடன், ஊர் மக்க ளிடம் தனக்கு நேர்ந்த அனுபத்தை எடுத்து கூறி யுள்ளார்.

ஆனால், ஒருசிலர் ஆதிகேசவனின் கோவில் கட்டும் எண்ணத்திற்கு முட்டுக்கட்டையாக நின்ற தால், கோவில் கட்டும் முயற்சியில் சுனக்கம் ஏற்பட்டுவிடுமோ என்ற எண்ணத்தில் ஸ்ரீ கன்னியம்மன் ஆலயத்திற்கு சென்று, அம்மன் சன்னதி முன் மனமுருகி வேண்டியுள்ளார்.

அப்போது அம்மன் சன்னதிக்கருகில் நாகம் படம் எடுத்து ஆடியுள்ளது. அந்த நாகத்தின் தலை ஐந்துவிதமாக காட்சி அளித்துள்ளது.

இதைக் கண்ட ஆதிகேசவன் கோவில் கட்டும் எண்ணத்திற்கு அம்மனே திருவருள் புரிந்ததாகவும், அந்த நாகம் ஐந்து தலைகளுடன் காட்சி அளித்து, பஞ்சமுக அனுமன் சன்னதி கட்ட அம்மனே அருள்வாக்கு கூறியதாகவும் எண்ணி மகிழ்ச்சியடைந்தார்.

எதைப் பற்றியும் பொருட்படுத்தாமல் கோவில் கட்டும் பணியை துவக்கியுள்ளார் ஆதிகேசவன்.

தனக்கு அம்மன் அருளால் நேர்ந்த அனுபவத் தை கூறியவுடன் ஒருசிலர் பொருளுதவி செய்ய முன்வந்துள்ளனர். கோவில் கட்டும் பணி துவங்கியது.

மூன்று வருடங்களுக்கு முன்பு புதைக்கப்பட்ட வானரத்தை தோன்டி எடுத்து கோவிலின் மூலஸ்தானத்தின் அடியில் வைத்து அதன்மீது கோவில் கட்ட முடிவு செய்து, வானரத்தை புதைத்த இடத்தைத் தோண்டியுள்ளனர்.

அப்போது அவர்கள் கண்ட காட்சி அவர்க ளுக்கு அதிர்ச்சியும், ஆச்சரியமும் அளிப்பதாக இருந்துள்ளது.

மூன்று வருடங்களுக்கு முன் புதைக்கப்பட்ட வானரத்தின் மீது சார்த்தப்பட்ட அம்மனின் பட்டுப்புடவையும், அம்மனின் மலர்களும் சேதம் அடையாமல், அதே பொலிவுடன் இருப்பதுடன், இறந்த வானரமும் புதைக்கப்பட்டதைப் போன்றே எந்தவித மாற்றமும் இல்லாமல் அப்படியே




இருந்துள்ளது.

பின் கோவிலின் மூலஸ்தானத்தின் அடியில் அந்த வானரத்தையும், அதனுடன் புதைக்கப்பட்ட புடவை, மலர்களையும் வைத்து அதன்மீது பஞ் சமுக அனுமன் சன்னதி எழுப்பப்பட்டுள்ளது.

இக்கோவில் மலைச்சரிவின் அடிவாரத்தில், இயற்கை எழில் கொஞ்சும் விதத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

இவ்வாலயத்தின் முகப்பில் பதினெட்டு அடி யில் பஞ்சமுக ஆஞ்சநேயர் சுதை சிற்பம் நின்ற கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாலயத்திற்கு செல்லும் முன்பு பாதாள விநாயகர் சன்னதி, ஸ்ரீ கன்னி அம்மன் ஆலயம் உள்ளது, இவை இரண்டும் மிகப் பழமை யான ஆலயங்களாகும், இவ்வாலயத்தில் ஸ்ரீ வைஷ் ணவி, ஸ்ரீ மகேஸ்வரி, ஸ்ரீ சுமதி, ஸ்ரீ பட்டாரிகா என கன்னியர் எழுவர் சன்னதிகள் உள்ளது.

கோவிலுக்கு உள்ளே பாம்பு புற்றுகள் அதிகம் காணப்படுகிறது. அம்மன் சன்னதி வெளியே வேப்பமரமும், சிம்ம வாகனமும் காணப்படுகிறது.

இக்கோவிலின் வடக்கு புறத்தில் சிறிது தூரத்தில் மலைச் சரிவில் பஞ்சமுக ஆஞ்சநேய

ஆன்மிகமலர்







ஸ்வாமி திருக்கோவில் அமைந்துள்ளது.

இவரை தரிசிக்க 26 படிகளை கடந்து செல்ல வேண்டியுள்ளது. ஒரு சிறிய முன் மண்டபமும் அதைஅடுத்து கர்பகிரஹமும் அமைந்துள்ளது.

இந்த அனுமன் ஆகர்ஷண சக்தியுடன் காட்சி அளிப்பதால் பார்ப்போருக்கு பரவசம் ஏற்படுகிறது.

வடைமாலை சார்த்துதல், சந்தன காப்பு சார்த்துதல், வெற்றிலை மாலை அணிவித்தல் போன்றவை சிறப்பாக செய்யப்படுகிறது.

பக்தர்கள் இத்தலத்தில் வேண்டுதல்களை வைத்த சில நாட்களிலேயே வேண்டுதல் நிறைவேறுவதாக கூறுகின்றனர்.

புற்று நோயால் அவதிப்பட்ட ஒருவர் இத்தலத்து ஆஞ்சநேயரை தொடர்ந்து வழிபட்டு தனது வேண்டுதலை வைத்துள்ளார். அவருக்கு புற்று நோய்க்கான அறிகுறியே இல்லாமல் மறைந்துள்ளது.

10 வருடங்களாக குழந்தை பாக்கியம் இல்லாத ஸ்தபதி ஒருவருக்கு இந்த ஆலயம் கட்ட துவங்கியதும் அவரது மனைவி கர்ப்பம் தரித்துள்ளார். இதனால் மகிழ்ச்சி அடைந்த ஸ்தபதி இத்திருக்கோவில் பணியினை மிகச் சிறப்பாக செய்துள்ளதாக கூறப்படுகிறது.

கலியுகத்தில் வணங்கப்பட வேண்டிய தெய்வங்களுள் ஆஞ்சநேயரும் ஒருவர், மனக்குறை, பணக்குறை, உடல்நலன் குறை, போன்ற குறைகள் உள்ளவர்கள், கலியுகத்திலும், இத்தலத்தில் வாசம் செய்யும் பஞ்சமுக அனுமனிடம் வேண்டிக் கொண்டால் நிச்சயம் வேண்டுதல் நிறைவடையும் என்று கூறுகின்றனர் இவ்வூர் மக்கள்.


கீதாராஜன்

இத்தலத்திற்கு செல்லும் வழி:

ஸ்ரீ வீர பஞ்சமுக ஆஞ்சநேயர் சுவாமி திருக்கோவில், குமிழி மதுரா மேட்டுப்பாளையம் கிராமம், கன்னிவாக்கம் போஸ்ட், வண்டலூர் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம்.

தொடர்பு எண்: ஆதிகேசவன் 9710229549, பூபாலன் 9710841299, பிரகாஷ் 9840341438.

– தொகுப்பு கீதாராஜன்
சென்னை,
9444228203

# பாம்பன் சுவாமிகள் அருளிய ராகு கேது தோஷ நிவர்த்தி




கிரகங்கள் அனைத்துமே காலசர்ப்ப தோஷத்தின் பிடியில் இருப்பதால் பல்வேறு பிரச்சனைகள் தொடர்ந்து சந்திக்கிறோம். இதற்கு தீர்வாக பாம்பன் சுவாமிகள் துவிதநாக பந்தம் என்ற மந்திரத்தை எழுதியுள்ளார்.

அவர் எழுதிய மந்திரத்தையும், அதற்குரிய படத்தையும் அருகில் கொடுத்துள்ளோம்...

இந்த படத்தை தங்களுடன் எப்போதும் வைத்துக் கொண்டால் தீமை உங்களை அனுகாது.

பாம்பன் சுவாமிகள் இயற்றிய இம்மந்திரத்தை அடிக்கடி, சமயம் கிடைக்கும்போதெல்லாம் கீழ் காணும் மந்திரத்தை கூறவும்.

சேயா சேயாதே தேயா சேயாசே
மாயா மாயாவா வாயா மாயாமா
வாயா மாவாயா மாயா சேமாசே
யோயா நேயாவோ யாயே தேயாளே

இந்த மந்திரத்தை தொடர்ந்து கூறினால், சர்ப்ப தோஷம், காலசர்ப்ப தோஷம், அடிக்கடி பாம்புகளின் தொல்லை, மாலை சுற்றிப் பிறந்த தோஷம், மகப்பேறு கால துன்பம், இராகு, கேது கிரக தோஷம் நீங்கப் பெறலாம்.

மேற்கண்ட பாடலை நன்கு மனப்பாடம் செய்து முருகப்பெருமான் வழிபாடு செய்யுங்கள். நிறைய பேரின் ஜாதகத்தில் காலசர்ப்ப தோஷத்தின்தாக்கம் இருக்கும் அல்லது காலசர்ப்ப யோகம் இருக்கும்.

ராகு கேது தசை நடப்பவர்கள் புத்தி நடப்பவர்கள் அடிக்கடி எந்த விஷயமென்றாலும் தடை தாமதங்கள் தடங்கல்களை சந்திப்பவர்கள் இதை பயன்படுத்த வேண்டும்.

குழந்தைபேறு அடையாதவர்கள் குழந்தை பாக்கியம் தடை உள்ளவர்கள் அடிக்கடி இந்த மந்திரத்தை கூறி இப் படத்தை பார்க்கவும்.

உங்களுடைய ஜாதக கட்டத்தில் ராகு கேது எங்கிருந்தாலும் இரண்டில் ஒருவர் சரியான இடத்தில் இருக்க மாட்டார், இதனால், புத்திர பாக்கிய தடை தோஷம் ராகு கேதுவால் ஏற்படும் வாய்ப்புகள் உள்ளது.

தீராத நீண்ட நாள் பிரச்சினைகள், நீண்ட கால மாக நோய்வாய்ப்பட்டவர்கள் இந்த படத்தை வைத்து பாடலை படியுங்கள் இதனால் நல்ல தீர்வு கிடைக்கும், சரியான மருத்துவ உதவிகள் கிடைக்கும். ஒரு நல்ல காரியத்திற்கு செல்லும் பொழுது இந்த படத்தை கையில் வைத்துக் கொண்டு வேண்டிக்கொள்ளுங்கள் அந்த காரியம் நல்லபடியாக நடக்கும்.

ராகு கேதுவை சரியாக புரிந்து கொள்ளவே முடியாது ஆனால் ராகு கேதுதான் நம்முடைய கர்மாக்கள்.

ராகு தாத்தா வழி பாவ புண்ணியங்களையும், கேது பாட்டி வழியான பாவ புண்ணியங்களுக்கான தீர்வை தருவார்கள். உங்கள் ஜாதக கட்டத்தில் ராகு கேது எந்த இடத்தில் இருக்கின்றதோ அதை அனுபவிக்கவோ அல்லது கர்மத்தை கழிக்கவோதான் நாம் பிறந்திருக்கிறோம் என்றும் ஜோதிடத்தில் கூறுவார்கள்.

ராகு 11ல் இருந்தால் சென்ற பிறவியில் பணத்தின் மீது ஆசைகள் அதிகம் லாபத்தை அனுபவிக்க பிறந்திருக்கிறார், கேது 5ல் இருந்தால் சென்ற பிறவியில் கோயில் சொத்தை கொள்ளையடித்தவர்கள் குழந்தைகளை கரு வறுத்தவர்கள், கருக்கலைப்பு செய்த நபர்கள் என்று ஜோதிடத்தில் கணிப்பார்கள்.

இந்த பிறவியிலும் இதை சரி செய்ய இறையாற்றல் கொடுக்கும் வாய்ப்பை பயன்படுத்தி கர்மாவை கழிக்க வேண்டும் மாறாக கர்மாக்களை அதிகரிக்க கூடாது.

ஆன்மிகத் தகவல்களை
எளிமையாக, பாமரர்களும் புரிந்து
கொள்ளும் வகையில்
ஆன்மிகமலர் மெயில்
புத்தகத்தில் (e-book)
வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD
eBook
DOWNLOAD
eBook DOWNLOAD
free

இதுவரை வெளிவந்த
155 க்கும் மேற்பட்ட
இதழ்களை




aanmeegamalar.com

இணையதளத்தில்
இலவசமாக
படிக்கலாம்.

# அன்னை உமையவளின் வாகனங்களும் தத்துவங்களும்





அன்னை பார்வதி தேவியின் வாகனங்கள் பல உள்ளது அவற்றில் முக்கியமான ஒருசில வாகனங்கள் ஒருசில தத்துவத்தை உணர்த்தும் விதத்தில் உள்ளதால், பல்வேறு கோவில்களில் குறிப்பிட்ட வாகனங்களுக்கு முக்கியத்துவம் தருவது வழக்கம்.

அந்த வகையில் அம்பாளுக்குரிய முக்கிய வாகனங்களும், அதன் தத்துவத்தைப் பற்றியும் பார்ப்போம்.

## யானை வாகனம்

தேவி, பண்டன் என்ற அசுரனுடன் போர் தொடுக்கப் புறப்பட்டாள். அப்போது தனது அங்குசத்திலிருந்து ஒரு சக்தியைத் தோற்றுவித்தாள். குரோதம் மற்றும் ஞானத்தின் வடிவான அங்குசத்திலிருந்து தோன்றிய அச்சக்தியை 'ஸம்பத்கரி' என்று அழைத்தனர். இவளே அன்னையின் யானைப் படையின் தலைவியானாள். 'ரணகோலஹலம்' என்ற யானையே இவளுக்கு வாகனமாயிற்று.

'மனவுறுதி என்ற அங்குசத்தால் ஐம்பொறிகளாகிய யானைகளையும் அடக்கும் சான்றோர் முக்திக்கு வித்தாகின்றனர்' என்று உரைக்கின்றது.

இதே கருத்தை வலியுறுத்துவதுதான் அம்பிகையின் வாகனம். அதாவது அம்பிகை வழிபாடு உயர்ந்த புலனடக்கத்தைத் தரும் என்பதே கருத்து. மற்றும் மயில் போல் யானையும் தனது வடிவத்தால் முகப்புத் தோற்றத்தால் ஓம் என்ற பிரணவத்தை நினைவுபடுத்துகிறது. தானே ஓங்காரத்தின் உட்பொருள் என்பதை அன்னை யானை ஊர்தியால் உணர்த்துகிறாள்.

## அன்ன வாகனம்

அன்னப்பறவை நீரை நீக்கிப் பாலை மட்டும் பருகும் இயல்புடையது. அதுபோல் சான்றோர்கள் பொய்யான உலகியல் விஷயங்களை விடுத்து மெய்ப்பொருளாகிய கடவுளையே நாடித் தேடிப் பற்றிக் கொள்வார்கள். மேலும் சில மந்திரங்களை 'ஹம்சம்' என்று குறிப்பிடுவர். ஹம்சம் என்றால் அன்னப்பறவை என்று பொருள்.

அம்மந்திரங்களின் உட்பொருளாய் விளங்குபவள் அம்பிகை. அவளை உணர்ந்து உயர்ந்த சான்றோர்களை பரமஹம்சர்கள் என்று கூறுவர்.



அச்சான்றோர்களின் மனதில் இருப்பவள் என்பதை உணர்த்தவும் அம்பிகை ஹம்ச வாகனத்தில் வருகிறாள்.

மேலும், தற்கால விமானங்கள் போல் தரையில் ஓடிய பின்னரே அன்னப்பறவையும் மேலே பறக்கத் தொடங்கும் இயல்புடையது. மண்ணில் இல்லறத்தில் சிறப்புற வாழ்ந்து மேல் நிலைக்கு உயரும் வாழ்க்கை நெறியை உணர்த்தவும் அவள் அன்னத்தைச் சிறப்பு வாகனமாகக் கொண்டுள்ளாள்.

ஆன்மிகமலர் புதிய அடையாளம்!! .காம்

## நாக வாகனம்

நாகம் (பாம்பு) விநாயகருக்கு உதர பந்தனம் எனும் அரைஞாண் கயிறாகவும், திருமாலுக்குப்பள்ளி யாகவும், சிவனுக்கு நாகாபரணம் (நாக ஆபரணம்) ஆகவும், முருகனின் மயிற்கால் பந்தனமாகவும் விளங்குகின்றது. அம்பிகைக்குச் சிறுவிரல் மோதிரமாக விளங்கும் நாகமே சிறப்பு நாட்களில் வாகனமாகிறது.

மூலாதாரத்தில் உறங்கிக் கொண்டிருக்கும் குண்டலினி சக்தி சுருண்டு படுத்திருக்கும் பாம்பு போல் தோன்றும். இந்திய தத்துவங்களில் ஈடுபாடு கொண்டு, கற்றுத் தேர்ந்து, பல நூல்களையும் இயற்றிய ஆங்கிலேய அறிஞர் சர் ஜான் உட்ராஃப் குண்டலினி சக்தியை 'சர் பண்டைன் பவர்' என்று குறிப்பிட்டுள்ளார்.

குண்டலினி சக்தியாக இருந்து மனிதனின் உறங்கும் ஆற்றல்களை மேல் நிலைக்குஉயர்த் திடும் அம்பிகைக்கு அந்தப் பாம்பே ஊர்தி யாகின்றது.

## சிம்ம வாகனம்

அம்பிகைக்கே உரிய சிறப்பு ஊர்தி சிங்கமே. தனது 'கர்ஜனை' யினாலேயே அனைத்தையும் அடக்கியாளும் திறமை சிங்கத்தின் தனித் தன்மை ஆகும். கம்பீரமும் யாரும் எளிதில் அண்டமுடியாது என்ற நிலையும் உடையது. அதே நேரத்தில் தருமம் தவறாதது சிங்கம். தன்னை எதிர்க்காத விலங்குகளை அடிக்காது. பசியில்லா வேளையில் வேட்டையாடாது.

அம்பிகையும் தனது மேலாண்மை மற்றும் தருமம் தவறாத இயல்பு ஆகியவற்றை உணர்த்த சிங்க வாகனத்தில் பவனி வருகிறாள்.

சிங்கமுகாசுரன் சூரபதுமனின் தம்பியாவான். முருகன் சூரனைத் தனக்கு மயில் வாகனமாக மாற்றிக் கொண்டான் அல்லவா? அதே போல் அவன் தம்பி சிங்கனையும் சிம்ம வாகனமாக்கித் தன் தாய்க்கு அளித்து விட்டான். இன்றும் பிள்ளைகள் தனது தாய்க்கென தனிக் கார் வாங்கிக் கொடுப்பது போலத்தான்.

அம்பிகை அமரும் அரியணையும் 'ஸ்ரீமத் சிம்மாசனம்' என்று சகஸ்ரநாமத்தில் சிறப்புடன் குறிப்பிடப் பட்டுள்ளது. பெரும்பாலும் காளியம்மன் முதலான ஆற்றல் மிகு தெய்வங்களுக்கே சிம்மவாகனம் சிறப்பு ஊர்தியாக விளங்குகிறது.

## ரிஷப வாகனம்

சிவாலயத் திருவிழாக்களில் கணபதி, சோமாஸ்கந்தர், தனி அம்பாள், முருகன், சண்டிகேஸ்வரர் என ஐந்து மூர்த்தங்கள் உலாவில் இடம் பெறும். இவற்றையே பஞ்ச மூர்த்திகள் அல்லது ஐந்திருமேனிகள் என்பர்.

இறைவன் ரிஷப வாகனக் காட்சியே சிவாலயத் திருவிழாக்களில் முதன்மையானது. அப்போது சோமாஸ்கந்தர் ரிஷப வாகனத்தில்



வருும்பொழுது தனியம்பாள் தனக்கே உரிய தனி ரிஷபத்தில் எழுந்தருளுவாள்.

அறுசுவை உண்டியை அனைவருக்கும் அளித்து விட்டு ஆலகால விஷத்தை உண்டவன் இறைவன். மாளிகைகளை மக்களுக்குக் கொடுத்துவிட்டு அவன் மயானத்தில் வசிப்பவன். அதாவது தன்னலமற்ற தியாகராஜனாக அவன் விளங்குகின்றான். அவன் எவ்வழியோ அம்பிகையும் அவ்வழிதான்.

காளை மாடு வயலில் ஓயாது உழைத்து உதவுகிறது. விளைந்த உணவுப் பொருட்களை பொதியாகச் சுமந்து வந்து சேர்க்கின்றது. அதன் உழைப்பால் உற்பத்தியான தானியங்களின் உட் பகுதியான அரிசியையும், பருப்புக்களையும் நமக்கு அளித்து விடுகின்றது. நாம் விரும்பாத உமி, தோல், வைக்கோல் முதலிய பகுதிகளையே தனக்கு உணவாக உண்டு மகிழ்கிறது. "உழைத்த எமக்கே உணவுப் பொருள் அனைத்தும்" என்று காளைகள் போராடத் தொடங்கினால் மனிதன் பட்டினியால் வாட வேண்டியதுதான்.

உழைப்பும் தியாக உள்ளமுமே இறைவனின் விருப்பம், இதனை உணர்ந்தவே சிவனும் சக்தியும் ரிஷப வாகனத்தை விரும்பி ஏற்றுக் கொண்டுள்ளனர்.

மேலும் ரிஷப வாகனம் தரும தேவதையின் வடிவமே என்பர். அனைத்தும் அழிந்துபடும் பேரழிவுக் காலத்தில், தருமம், தான் அழியாது நிலைத்திருக்க விரும்பி அழியாத சிவசக்திகளின் ஊர்தியாகி, காளையாக வருகிறது.

## குதிரை வாகனம்

அம்பிகை தனது பாச ஆயுதத்திலிருந்து தோற்றுவித்த சக்தி 'பரி ஊர்வாள்' எனப் பொருள்படும் அச்வாரூடா தேவியாவாள். எவரா லும் வெல்ல முடியாத 'அபராஜிதம்' என்ற குதிரை அச்வாரூடாவின் வாகனமாயிற்று. இவள் அம்பிகையின் குதிரைப் படையின் தலைவி. கோடிக்கணக்கான குதிரைகள் இவளது ஆளு கைக்கு உட்பட்டவை.

எண்ணற்ற ஆசைகளே குதிரைப் படை யாகும். அவற்றை நன்னெறிப்படுத்தும் மனமே அச்வாரூடா என்ற குதிரைப்படைத் தலைவி. இயந்திரங்களின் ஆற்றலை அளக்கத் தற் காலத்தில் குதிரைச் சக்தியே அலகாக உள்ளது.

ஆற்றல்களுக்கெல்லாம் அதிராணியாக விளங் குபவள் என்பதையும் நன்னெறிப்பட்ட ஆசைகளை நிறைவேற்றி அருள்வாள் என்பதையும் உணர்த்த அச்வ வாகனம் அல்லது குதிரை வாகனத்தைக் கொண்டிருக்கிறாள் தேவி.

ஆன்மிகமலர்





## காமதேனு வாகனம்

அழகிய பெண்ணின் முகமும் பசுவின் உடலும் பறவையின் இறக்கைகளும் கொண்ட காமதேனுவின் உடலில் அனைத்துத் தேவ சக்திகளும் இடங்கொண்டுள்ளன என்பது ஐதீகம். சத்வ குணம் என்ற மென்மையான நல்லியல்புகளைக் கொண்டது பசு. ஊட்டச் சத்துக்கள் அனைத்தையும் உள்ளடக்கியது பசுவின் பால் என்பது அறிவியல் கருத்து.

காமதேனு விரும்பிய அனைத்தையும் அளிக்கும் ஆற்றலுடையது என்பர். அனைத்துத்தேவர்களையும் தனது மேலாண்மையால் கட்டுப் படுத்துபவள் தேவி. அடியார்களின் விருப்பங்களை யும் அவள் விரைவில் நிறைவேற்றி வைக்கிறாள். இக்கருத்தை வலியுறுத்தவே அம்பிகைக்குச் சிறப்பு ஊர்தியாக இது அமைகிறது.

## கந்தருவி வாகனம்

மனிதர்களுக்கும் தேவர்களுக்கும் இடைப்பட்ட நிலையில் உள்ளவர்கள் கந்தர்வர்கள் கவலையற்று இசைபாடித் திரிவதே இவர்களின் வேலை.

'இசை வடிவாய் நின்ற நாயகி' என்று அபிராமிப் பட்டரால் போற்றப்படும் அம்பிகைக்குக் கந்தர்வப் பெண் வாகனமாக விளங்குகின்றாள். மனித முகமும் இறக்கைகளும் உள்ள வடிவத்துடன் கந்தருவி விளங்குவாள்.

நுண்கலைத் துறைகளைச் சேர்ந்தவர்கள் தங்களுக்கே உரிய தனிஉலகத்தில் சிறகடித்துப் பறந்து கொண்டிருப்பார்கள். அதைக் குறிப்பால் உணர்த்துவதுதான் கந்தர்வர்களின் சிறகுகள்.

சிவன் கோயில் திருவிழாக்களில் இறைவனுக்கும் கந்தருவ வாகனம் உண்டு. அன்றே அம்பிகைக்குக் கந்தருவி வாகனம்.

நுண்கலைகளில் தனக்குள்ள ஈடுபாடு முதலியவற்றை விளக்கவும் அவற்றை அடியார்களுக்கு அருள்பவள் என்பதை உணர்த்தவும் அம்பிகை கந்தருவி வாகனத்தில் வருகிறாள்.

## மான் வாகனம்

அம்பிகையின் மான் ஊர்தி வடமொழிநூல்களில் குறிப்பிடப்படவில்லை. அப்படியேதேவி சம்பந்தமான தமிழ் நூல்களிலும் இடம் பெறவில்லை.

ஆனால், இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தில் அன்னை மான்மேல் வருவாள் என்ற குறிப்பு உள்ளது. சிலப்பதிகாரத்தில் வேட்டுவரி என்ற பகுதியில் பல்வேறு திருநாமங்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றில் ஒன்றே 'பாய்கலைப் பாவை' என்பதாகும்.

துள்ளிப் பாயும் கலைமானைத் தனக்கு ஊர்தியாகக் கொண்டவள் என்பது இதன் பொருள்.

மனித மனம் ஓரிடம் நில்லாது அலைபாயும் இயல்புடையது. அதனை இறைவன் தனது ஆளுகையில் வைத்துள்ளான். சிவபெருமானின் இடக்கரத்தில் இடம் பெறும் மான் இதனையே உணர்த்துகிறது. அதே வகையில், துள்ளிப்பாயும் இயல்புடைய மனத்தின் மீது ஏறி அதனை நெறிப்படுத்துபவள் அம்பிகை. மனத்தின் மீது அவளுக்கே மேலாண்மை உண்டு. எனவே, அவள் பாய்கலைப் பாவையாகி வருகிறாள்.

இவை தவிர கிளி, பூதம், யாளி போன்ற வாகனங்களும் உண்டு.

மாதம் தோறும் 2 புத்தகங்கள்




மாதமிருமுறை e-magazine

படியுங்கள் இலவசமாக

aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்

# கொங்கு தேசத்தை காக்கும்

# கோனியம்மன்




தன்னை நாடிவரும் பக்தர்களுக்கு வேண்டியதை வேண்டும் வண்ணம் வழங்கும் தாயாகவும், கொங்கு மண்ணின் காவல் தெய்வமாகவும் அருள்பாலிக்கும் கோனியம்மன் திருத்தலம் வணங்குவோம் வாருங்கள் பக்த பெருமக்களே!

இமயமலை முதல் குமரி வரை இடைப்பட்ட பாரதத் திருநாட்டில் உயிரினும் திகழ்வது நம் தமிழ்நாடு. தமிழ்நாட்டின் ஒரு பகுதியாக திகழ்வது கோயம்புத்தூர் மாநகரம். சுமார் 600 ஆண்டுகளுக்கு முன்னர் பண்டைய காலத்தில் பேரூருக்கு கிழக்கே தோன்றிய புத்தூரை கோவன் என்ற இருளர் தலைவன் காடு திருத்தி நாடு செய்த போது உண்டானது தான் கோவன் புத்தூர்.

இருளர் தலைவரான கோவன் தன் குடிசைக்கு அருகே வடபாகத்தில் திருக்கோயில் அமைத்து, அதில் ஒரு கல் நட்டு ஆதி சக்தியை எழுந்தருளச் செய்து தானும் தன் இனத்தவர்களும் குல தெய்வமாக வழிபட்டும், விழா செய்தும் கொண்டாடிய இடம் தான் கோனியம்மன் திருக்கோயிலாகும்.

தமிழில் கோ என்றால் மன்னர் மன்னன் என்றும், வடமொழியில் ராஜாதி ராஜன் எனவும் கூறுவர். இவ்வாறு கோன் திரியும் போது கோனி எனில் அரசருக்கு அரசி அல்லது அரசியர்க்கரசி எனவும் பொருளாகும்.

கோனியம்மன் என்றால் அரசர்களால் வழிபடும் ஆதி சக்தியாகும். ஆதலால் அம்பிகையின் திருநாமம் கோனியம்மன்





என வழங்கலாயிற்று. நாளடைவில் கோவன் புத்தூர் கோயம்புத்தூர் என மருவிற்று.

திருமகளும் கலைமகளும் என்றும் புகழோங்கும் கோயம்புத்தூர் மாநகரின் நடுவே அணி விளக்காக, ஆதி தேவதையாக திருக்கோயில் கொண்டு விளங்கும் மலைமகள் இப்பகுதி மக்களின் காவல் தெய்வமாகவும், தன்னை பய பக்தியோடு வழிபடும் பக்தர்களுக்கு வேண்டியதை வேண்டியபடி அருளும் கண்கண்ட தெய்வமாகவும் வடக்கு நோக்கிய ஆலயத்தில் கம்பீரமாக அருள்பாலிக்கிறாள் தேவி.

ஆலயத்தின் ஏழு நிலை ராஜ கோபுரத்தின் மேலே வைக்கப்பட்டுள்ள ஒன்பது கோபுர கலசங்களை பார்த்து வணங்கிய பின்னர் திருக்கோயிலின் உள்ளே நுழைந்தால் அரச மரத்தடியில் உள்ள பஞ்சமுக விநாயகரின் தரிசனம் கிடைக்கும். இவரை வணங்கிய பின் இரண்டாவது கோபுரத்தை கடந்தால் முன் மண்டபத்தையடுத்து அர்த்தமண்டபத்தில் கொடிமரம் அதனையடுத்து, பலிபீடம், சிம்ம வாகனம் திருக்காட்சி கிடைக்கின்றன.

துர்கா, கௌரி, சரஸ்வதி, லட்சுமி ஆகிய தெய்வங்களின் தரிசனம் கிடைக்கின்றன. கருவறை முன்பு துவார சக்திகள் காவல் புரிகின்றனர். கருவறையில் வடக்கு நோக்கி வீற்றிருக்கும் அருள்மிகு கோனியம்மன் உக்கிரமான பார்வையுடன் தன்னை எதிர்த்து சண்டையிட வந்த கொடிய துஷ்டனை வீழ்த்தி வீர வாகை சூடியது போல் காட்சியளிக்கிறாள்.

மார்த்தினியின் வலக்கைகள் நான்கிலும் சூலம், உடுக்கை, வாள், சங்கம் ஆகிய ஆயுதங்கள் ஏந்தியவாறு அம்பிகை அருள்பாலிக்கின்றாள். அவளது திருவுருவத்தில் இடச் செவியிலே தோடும் வலச்செவியேலே குண்டலமும் கொண்டு காணப்படுவதால் கோனியம்மன் அர்த்தனாரீஸ்வரர் உடன் தொடர்பு கொண்ட வீர சக்தியாகவும், சிவமும், சக்தியும் வேறில்லை என்பதை போலவும் இத்தல அம்மன் உணர்த்துகிறாள்.

அன்னையிடம் வேண்டிக் கொள்ள திருமணத் தடை நீங்கும், குழந்தைப்பேறு கிட்டும், நோய்கள் நீங்கும், தொழில் விருத்தி அடையும் என்பது நம்பிக்கை.கனிவோடு வேண்டினால் பரிவோடு நம் குறையை தீர்த்து வைப்பாள் என்கின்றனர் பலன் பெற்ற பக்தர்கள்.

வெளி பிரகாரத்தில் சாந்த விநாயகர், வள்ளி, தெய்வானை சமேத சுப்பிரமணியர், ஆதி கோனியம்மன், துர்க்கை அம்மன், நவநாயகர்கள் தம்பதியர் சமேதராக அருள்பாலிக்கின்றனர்.

சூரியன் ஏழு குதிரை பூட்டிய ரதத்தில் வீற்றிருக்கிறார். தம்பதியர் ஒற்றுமைக்காகவும், சனி, ராகு கேது மற்றும் குரு பெயர்ச்சியால் பரிகாரம் செய்ய வேண்டியவர்கள் தோஷ நிவர்த்திக்காகவும் இங்கு வேண்டிக்கொள்கின்றனர். இத்தலத்தில் வேப்பம், வில்வம், நாகலிங்கம், அரசமரம் ஆகிய தேவ மரங்கள் தல விருட்சங்களாக உள்ளது மேலும் சிறப்பு சேர்க்கிறது.

முதன்முதலாகப் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆதி விக்ரத்திற்கும் தனி சன்னதி அமைத்து வழிபடுவது ஆலயங்களின் மரபுகளில் ஒன்றாகும். அந்த மரபின் படி இங்கே ஆதியில் பிரதிஷ்டை





செய்யப்பட்ட ஆதி கோனியம்மனுக்கு இங்குத் தனிச் சன்னதி அமைந்துள்ளது.

வெள்ளிக்கிழமை நாளில் எண்ணற்ற பெண் பக்தர்கள் தங்கள் கோரிக்கைகளை அன்னையிடம் சொல்லி விரைவில் அவள் அருட் கடாட்சத்தால் பலன் பெறுகின்றனர். அமாவாசை, பவுர்ணமி நாட்களில் விசேஷ பூஜை உண்டு. தை மாதம் வெள்ளி, தைப்பொங்கல், நவராத்திரி, திருக்கார்த்திகை, தனுர்மாத பூஜை, தீபாவளி ஆகிய முக்கிய விரத தினங்களில் அம்மனுக்கு சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது.

கோரிக்கைகள் நிறைவேறினால் அம்மனுக்கு வஸ்திரங்கள் சாத்தி சிறப்பு அபிஷேகம், அன்னதானம் செய்கின்றனர்.

துர்க்கைக்கு பொட்டுத்தாலி செலுத்தி எலு மிச்சை தீபம் ஏற்றுகின்றனர். நோய் நீங்கவும், மாங்கல்ய பாக்கியத்திற்கும் மாவிளக்கு, பொங்கல் வைத்து பிரார்த்தனை செய்கின்றனர்.வேறு எந்த வொரு அம்மன் தலங்களில் இல்லாத சிறப்பாக ஆடி மாதம் 30 நாளும் ஊஞ்சல் உற்சவம் நடை பெறுகிறது.

கோனியம்மனுக்கு பக்தர்கள் தங்கப் பாவாடை சாத்துதல் வழிபாடு செய்தால் செய்யும் தொழில் தடையின்றி முன்னேற்றம் அடையும். குழந்தைப்பேறு இல்லாதவர்கள் இத்தலத்தில் உள்ள அரச மரத்தில் தொட்டில் கட்டி வழிபட்டால் விரைவில் குழந்தைப் பேறு கிடைக்கும் என்பது ஐதீகம்.

செவ்வாய் வெள்ளி மற்றும் சுபமுகூர்த்த நாட் களில் ஆயிரக்கணக்கில் பக்தர்கள் அன்னையை நாடி வருகின்றனர். திருமணச் சடங்குகளில் மிகவும் முக்கியமானது நிச்சயதார்த்தம் ஆகும். கோவை மக்கள் பெரும்பாலும் உப்பு மஞ்சள் மாற்றிக்கொள்வதன் மூலமாகவே திருமணத் தை உறுதி செய்கின்றனர்.கோவையை பொருத் தளவில் உப்பு மஞ்சள் வாங்குதல் என்றாலே கோனியம்மன் கோயில் தான் என்று சொல்லும் அளவிற்கு சுபமுகூர்த்த நாட்களில் பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டார் என இரு வீட்டார் ஒன்று கூடி அம்மனுக்கு அபிஷேகம் செய்து உப்பு மஞ்சள் மாற்றி தங்கள் இல்ல திருமண பந்த நிகழ்வினை உறுதிப்படுத்துவது இத்திருக்கோயிலில் சிறப்பான ஒன்றாகும்.

இத்திருக்கோயிலின் பெருந்திரு விழாவான மாசி திருத்தேர் திருவிழா 14 நாட்கள் நடை பெறுகிறது. முதலாம் திருநாள் கொடியேற்றம் அக்னிச்சாட்டு நடைபெறுகிறது.

பூச்சாட்டு, அக்னி கம்பம் நடும் வழிபாட்டில் திரளாக பக்தர் கள்



செ.சு.சரவணகுமார்





கலந்து கொண்டு, பூ கம்பத்துக்கு தண்ணீர் ஊற்றி வழிபாடு செய் வார்கள். தொடர்ந்து கம்பத் திற்கு கீழ் பகுதியில் உப்பு, மஞ்சள், மிளகு ஆகியவை வைத்து பக்தர்கள் வழிபாடு செய்வர். மேளதாளங்கள், மங்கள இசை இசைக்கப்படும்.

இரண்டாம் திருநாள் புலி வாகனத்தில் அம்மன் திருவீதி உலா, மூன்றாம் திருநாள் கிளி வாகனத்தில் அம்மன் திருவீதி உலா,நான்காம் திருநாள் சிம்ம வானத்தில் அம்மன் திருவீதி உலா, ஐந்தாம் திருநாள் அன்ன வாகனத்தில் அம்மன் திருவீதி உலா, ஆறாம் திருநாள் காமதேனு வாகனத்தில் அம்மன் திருவீதி உலா, ஏழாம் திருநாள் வெள்ளை யானை வாகனத்தில் அம்மன் திருவீதி உலா நடைபெறுகிறது.

எட்டாம் திருநாள் திருக்கல்யாணம் நடை பெறும்போது சிவபெருமான் அம்பி கையை திரு மணம் செய்து கொள்வார்.

அப்போது, கோயில் எதிரே யாககுண்டம் வளர்த்து, அக்னியை சிவனாகப் பாவித்து பூஜை செய்வர்.பூஜையில் பயன்பட்ட தீர்த்த கலசத்தின் மேலே வைத்த மாங்கல்யத்தை அம்பிகைக்கு அணிவிப்பர்.அக்னி வடிவ சிவபெருமான், அம்பி கையை திருமணம் செய்து கொள்வதாக ஐதீகம்.

ஒன்பதாம் திருநாள் திருத்தேரோட்டம் நடை பெறுகிறது. தேர் நிலை திடலில் துவங்கிய தேரோட்டம் கோவை மாநகரின் முக்கிய திருவீதி களான ஒப்பணக்கார வீதி வழியாக பிரகாசம் பகுதியை வந்தடைந்து, அதனைத் தொடர்ந்து பெரிய கடைவீதி வழியாக வைசியாள் வீதியை அடைந்து மீண்டும் தேர் நிலை திடலை வந்தடை யும்.

திருத்தேர் வலம் வரும் பகுதி முழுவதும் திரண்டு இருக்கும் பொதுமக்கள் உப்பு மற்றும் மிளகினை பயபக்தியோடு வீசி அம்மனை வழி படுவார்கள்.

தேரோட்டத்தை காண கோவை மட்டுமின்றி சுற்று வட்டார பகுதியில் இருந்தும், வெளியூர்களில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இவ்விழாவில் கலந்து கொள்வார்கள்.

பத்தாம் திருநாள் குதிரை வாகனத்தில் அம் மன் திருவீதி உலா, பதினொன்றாம் திருநாள் தெப்பத் திருவிழா, 12ஆம் திருநாள் யாளி வாகனத்தில் அம்மன் திருவீதி உலா, 13 ஆம் திருநாள் காலை சிறப்பு அபிஷேகம்,அலங்காரம், தீபாராதனையும், 14 ஆம் திருநாள் வசந்த விழா வுடன் இப்பெருந்திருவிழா நிறைவு பெறுகிறது.

பக்தர்கள் அனைவரும் கொங்குத்தாய் கோனி யம்மனை வழிபட்டு அம்பிகையின் திருவருள் பெற்று பாரினில் பல் சுகம் எய்திட வேண்டும்.

கோவை மத்திய பேருந்து நிலையத்திலிருந்து இரண்டு கி.மீ தொலைவிலும், கோவை ரயில் நிலையத்திலிருந்து நடந்து வரும் தூரத்திலும் இக்கோயில் அமைந்துள்ளது.

– சென்னிவீரம்பாளையம் செ.சு.சரவணகுமார்

தொடர்புக்கு: 93458 88883



Scan to Read
aanmeegamalar
e-book

# மேற்கு திசையும் லிங்க தரிசனமும்



லிங்க தரிசனம் என்பது பொதுவாக கிழக்கு நோக்கியவாறு காட்சியளிக்கும் ஆனால் ஒருசில கோவில்களில் மேற்கு நோக்கியவாறு சிவபெருமான் காட்சியளிப்பார்.

இவ்வாறு மேற்கு நோக்கிய சிவனை தரிசித்தால் ஆயிரம் கிழக்கு நோக்கிய சிவனை தரிசித்த புண்ணியம் கிடைக்கும் என்று வாமதேவர் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு, மேற்கு நோக்கிய சிவலிங்கங்களின் ஆவுடையார் (கோமுகை) வடக்கு நோக்கி இருக்கும் என்பது பொதுவான விதி.

ஆனால், மேற்கு நோக்கிய லிங்கத்தின் ஆவுடையாருக்கு சக்தி அதிகம். இங்கு செய்யப்படும் பரிகாரங்கள் வெகு விரைவில் பலன் தந்து கொண்டு இருக்கின்றன.

மேலும் மேற்குப் பார்த்த லிங்கம் உள்ள ஆலயங்கள் தோஷ நிவர்த்தி தலங்களாக விளங்குகிறது.

அந்த வகையில் மேற்கு நோக்கிய லிங்கங்கள் வீற்றிருக்கும் 41 ஸ்தலங்களைப் பற்றி பார்ப்போம்.

1. அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோவில், திருமயிலை, சென்னை
2. அருள்மிகு மருந்தீஸ்வரர், திருவான்மியூர், சென்னை
3. அருள்மிகு இருதயாலீஸ்வரர், திருநின்றவூர், சென்னை
4. அருள்மிகு பாலேஸ்வரர், பாலேஸ்வரம், செங்கல்பட்டு மாவட்டம்
5. அருள்மிகு வராஹீஸ்வரர், தாமல், காஞ்சீபுரம் மாவட்டம்
6. அருள்மிகு திருமேற்றளீஸ்வரர், திருக்கச்சி மேற்றளி, காஞ்சீபுரம் மாவட்டம்
7. அருள்மிகு காசி விஸ்வநாதர், கிருஷ்ண சமுத்திரம், திருவள்ளூர் மாவட்டம்
8. அருள்மிகு ஜலநாதீஸ்வரர், தக்கோலம், வேலூர் மாவட்டம்
9. அருள்மிகு வாலீஸ்வரர், குரங்கனில் முட்டம், திருவண்ணாமலை மாவட்டம்
10. அருள்மிகு அதுல்நாதீஸ்வரர், அரகண்ட நல்லூர், விழுப்புரம் மாவட்டம்
11. அருள்மிகு மருந்தீசர், திருஇடையாறு, விழுப்புரம் மாவட்டம்
12. அருள்மிகு வீரட்டீஸ்வரர், திருக்கோயிலூர், விழுப்புரம் மாவட்டம்
13. அருள்மிகு சிஷ்டகுருநாதர், திருத்துறையூர், கடலூர் மாவட்டம்
14. அருள்மிகு வைத்தியநாதீஸ்வரர், வைதீஸ்வரன்கோயில், மயிலாடுதுறை மாவட்டம்
15. அருள்மிகு அமிர்கடேஸ்வரர், திருக்கடையூர், நாகப்பட்டினம் மாவட்டம்
16. அருள்மிகு சுவர்ணபுரீஸ்வரர், செம்பனார் கோயில், நாகப்பட்டினம் மாவட்டம்
17. அருள்மிகு கடைமுடிநாதர், கீழையூர், நாகப்பட்டினம் மாவட்டம்
18. அருள்மிகு தர்மபுரீஸ்வரர், குருகத்தி,

aanmeegamalar.com aanmeegamalar.com

நாகப்பட்டினம் மாவட்டம்

19. அருள்மிகு பார்வதீஸ்வரர், திருத் தெளிச்சேரி, காரைக்கால்
20. அருள்மிகு மனுநாதேஸ்வரர், மருதவஞ் சேரி, திருவாரூர் மாவட்டம்
21. அருள்மிகு விஸ்வநாத சுவாமி, தட்டாத்தி மூலை, திருவாரூர் மாவட்டம்
22. அருள்மிகு கோணேஸ்வரர், குடவாயில், திருவாரூர் மாவட்டம்
23. அருள்மிகு அபிவிருத்தீஸ்வரர், அபிவிரு தீஸ்வரம், திருவாரூர் மாவட்டம்
24. அருள்மிகு கண்டீஸ்வரர், திருக்கண்டியூர், தஞ்சாவூர் மாவட்டம்
25. அருள்மிகு இராமலிங்கேஸ்வரர், பாப நாசம், தஞ்சாவூர் மாவட்டம்
26. அருள்மிகு தர்மபுரீஸ்வரர், பழையாறை, தஞ்சாவூர் மாவட்டம்
27. அருள்மிகு இராமநாதசுவாமி, கும்ப கோணம், தஞ்சாவூர் மாவட்டம்
28. அருள்மிகு உக்தவேதீஸ்வரர், திருத் துருத்தி (குத்தாலம்), தஞ்சாவூர் மாவட்டம்
29. அருள்மிகு தாயுமானவசாமி, திருச்சிராப் பள்ளி
ஆன்மிகமலர்
30. அருள்மிகு ஜம்புகேஸ்வரர், திருவானைக் காவல், திருச்சிராப்பள்ளி மாவட்டம்
31. அருள்மிகு கைலாசநாதர், கற்குடி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்
32. அருள்மிகு உய்யகொண்டார், உய்ய கொண்டான் திருமலை, திருச்சிராப்பள்ளி மாவட்டம்
33. அருள்மிகு வம்சோத்தாரகர், பெருங்க ளூர், புதுக்கோட்டை மாவட்டம்
34. அருள்மிகு காசி விஸ்வநாதர், திருப் பரங்குன்றம், மதுரை மாவட்டம்
35. அருள்மிகு மன்னீஸ்வரர், அன்னூர், கோயம்பத்தூர் மாவட்டம்
36. அருள்மிகு நீலகண்டேஸ்வரர், இருகூர், கோயம்பத்தூர் மாவட்டம்
37. அருள்மிகு திருமுருகநாதசுவாமி, திரு முருகன்பூண்டி, கோயம்பத்தூர் மாவட்டம்
38. அருள்மிகு இரத்தினகிரீஸ்வரர், ஐயர் மலை, கரூர் மாவட்டம்
39. அருள்மிகு விஸ்வேஸ்வரன் பள்ளி பாளையம் நாமக்கல் மாவட்டம்
40. அருள்மிகு கைலாசநாதர் தாரமங்கலம் சேலம் மாவட்டம்
41. அருள்மிகு திருக்காளத்தீஸ்வரர், திருக் காளத்தி, ஆந்திரா.

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
SML Graphics
Sree Maha Laksmi Graphics
செல்: +91-9444228203

கட்டாய சந்தா இல்லை!

சப்ஸ்கிரைப் இல்லை!!

மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

ஆன்மிகமலர்.காம் வழங்கும்
ஆன்மிகமலர் மெயில் புத்தகம்

ஒரே கிளிக் 160 இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்

# முருகன் கற்பனையல்ல, கதையல்ல, கற் சிலையுமல்ல

# அவன் சாஸ்வதமான நிஜம்

கணபதியை மூல முதற்பொருளாக கொண் டாடும் காணாபத்யம் என்பதை பற்றி சிறிது சிந்தித்து முடித்து அடுத்ததாக கௌமார தெய்வமாகிய திருமுருகனின் திருவருளை சிந்திப்போம் என்று நான் சொன்னவுடன் அதியசித்திலும் அதியமாக பல மின்னஞ் சல்கள் பல தொலைபேசி அழைப்புகள் சில கடிதங்கள் எனக்கு வந்தன அவைகள் எல் லாமே முருகனின் திருவருளால் தங்களது வாழ்வில் ஏற்பட்ட ஏற்பட்டு கொண்டிருக்கும் அதி அற்புத மாற்றத்தை விரிவாக குறிப்பிட்டு மயில்வாகனனின் அருளமுதத்தை எழுதும்போது இதையும் சேர்த்து எழு துங்கள் என்ற விண்ணப்ப மாகவே இருந்தது.

அவைகளை பார்க்கும் போது எனக்கு நிஜ மான மெய்சிலிர்ப்பு ஏற்பட்டது. அதிசயங்கள் நடக்காது என்று ஒதுக்கி தள்ளும் கலிகாலத்தில் கூட இத்தனை அதிசயங்கள் முருகபெருமானால் நடைபெற்று கொண் டிருக்கிறதா? என்ற வியப்பும் மலைப்பும் ஏற்பட்டது.



சிங்கப்பூரிலி ருந்து கலைவாணி என்ற அறுவது வயது அம்மையார் முருகன் என்றாலே சின்ன குழந்தை யில் இருந்து தீராத ஈடுபாடு எனக்கு அதுவும் பாலமுருகனை பார்க்கும் போது என்னை அறியாமல் ஒரு நெகிழ்ச்சி எனக்குள் ஏற்படும் எப்படியும் இந்த பாலமுருகனை என்றா வது ஒருநாள் தொட்டு பார்க்க வேண்டும். அவன் பட்டு போன்ற கன்னத்தில் முகத்தோடு முகம் வைத்து முத்தாட வேண்டும் என்ற ஆசை எனக்கு அடிக்கடி ஏற்படும் பக்கத்து வீட்டு குழந்தை ஏற்னால் கூட பெற்றோரின் அனுமதி இல்லாமல் தொட்டுவிட முடியுமா?

எம்பெருமான் முருகன் சாதாரண பக்கத்து வீட்டு குழந்தையா என்ன நினைத்தவுடன் தொட்டு பார்க்க அவன் கைலாச நாதனின் செல்ல குழந்தை அன்னை பார்வதியின் மடியில் விளையாடும் சிங் கார குழந்தை உலகத் தையே ஈன்றெடுத்த அம்மையப்பனை விட்டு விட்டு அற்ப மானிட பதர் நான் அழைத்தால் அவன் வருவானா?

பள்ளிபருவத்தில் ஏற் பட்டு விட்ட இந்த ஆசை என் கூடவே வளர்ந்தது நானும் கல்யாணம் முடித்து பிள்ளைகள் பெற்று பேரன் பேத்திகளை பார்த்து பாட்டி

யாகவும் ஆகிவிட்டேன் ஆனாலும் செல்வ முத்து குமரனை நெஞ்சோடு அணைக்கும் ஆசை மட்டும் மறையவே இல்லை மாறவேயில்லை மாறாக சிறிய செடியாக இருந்தது பெரிய மரமாகி விழுதுவிட்டு படர்ந்து நிற்பது போல் அதிகரித்து கொண்டே தான் போனது அன்று இப்படி தான் முருகன் கோவிலில் சன்னிதானத்தின் முன் நின்று அவன் கொள்ளையழகை நேரம் போவதே தெரியாமல் பருகி கொண்டிருந்தேன் மனிதனின் மனது தான் நேற்று பிறந்தது போல் இளமையாகவே இருக்கிறது தவிர அவனுடைய உடம்பு வருடங்கள் போக போக முதுமை யடைந்து தளர்ந்து விடுகிறது. நீ கிழவியாகி விட்டாய் என்று உடம்பு சொல்வதை மனது பல நேரங்களில் ஏற்றுக்கொள்வதில்லை நானும் அப்படிதான் அறுவது வயதிற்கு மேல் ஆன பிறகு கண்பார்வை நன்றாக மங்கி விடுகிறது.

நான் என் கண்ணின் சக்தியை மறந்து இருட்டும் வரை முருகனின் திருமேனியை ரசித்தவண்ணமே இருந்துவிட்டேன்.

அர்ச்சகர் வந்து அம்மா நடையை சாத்த வேண்டும் என்று சொன்னவுடன்தான் சுய உணர்வுக்கு வந்தேன் இருட்டி விட்டது மழை வேறு தூவ ஆரம்பித்து விட்டது வீட்டிற்கு போய் சேர்வதற்கு ஒரு மணி நேரமாவது ஆகும். விரைவாக நடக்க வேண்டும். என்ற படபடப்பில் ஆலையத்தை விட்டு வேகமாக வெளியில் வந்தேன் வந்தவள் கோவில்வாசல் சற்று உயரம் என்பதை மறந்து காலை வேகமாக கீழே ஊன்றி விட்டேன். பள்ளத்தில் ஊன்றிய கால்



ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

நிலைதடுமாறி என்னை குப்புற தள்ளிவிட்டது தலையில் அடிபட்டுவதை உணர்ந்தேன் அதன் பிறகு எனக்கு எதுவுமே தெரியவில்லை மயக்கம் தெளிந்து கண்விழித்து பார்த்த போது மருத்துவமனையில் இருந்தேன்.

என் பிள்ளைகளும் கணவரும் சோகமாக என்னை சுற்றி நின்றார்கள். வயதான காலத்தில் என்னைவிட்டு போகயிருந்தாயே என்று என் கணவர் வாய்விட்டு அழுதார் எனக்கும் அழுகை வந்தது அப்போது மருத்துவ தாதி பெண் வந்து எல்லோரும் வெளியில் இருங்கள் நோயாளியை அதிகம் பேசவிடாதீர்கள் என்று அவர்களை அனுப்பி வைத்தாள்.

எனக்கு ஒவ்வொன்றாக நினைவிற்கு வந்தது கோயில் வாசல்படியில் இருந்து விழுந்த எனக்கு தலையில் அடிபட்டிருக்கிறது, பலமான காயமும் உண்டாகியிருக்கிறது. குறைந்தபட்சம் இரண்டு நாட்களாவது மயங்கிய நிலையிலேயே இருந்துருப்பேன் என்று தோன்றியது. விபத்து வருவதும் அதில் அடிபடுவதும் சில நேரம் உயிர் போவதும் இயற்க்கை தான் இப்படி தான் இவர் வாழ்க்கை முடியவேண்டும் என்று இருந்தால் அதை யாரால் மாற்ற இயலும் நான் சாவதற்கு பயப்படவில்லை ஆனால் நான் இறந்து விட்டால் என் கணவனை கவனித்து கொள்வது யார்? அவருக்கு வேளாவேளைக்கு உணவு கொடுத்து வென்னீர் வைத்து கொடுத்து பராமரிப்பது யார்? ஆயிரம் தான் பிள்ளைகள் செய்தாலும் என்னிடம் கேட்பது போல் உரிமையாக அவர் யாரிடம் கேட்க இயலும். முருகா நீ மரணத்தை தருவதாக இருந்தால் எங்கள் இருவருக்கும் ஒன்றாகவே தா என்று எத்தனை முறை வேண்டியிருப்பேன். அது அவன் காதுகளில் விழாமலா இருந்திருக்கும்.

நிச்சயம் விழுந்திருக்கும் அதனால்தான் அவன் மண்டையில் அடிபட்ட பிறகும் மூளையில் பாதிப்பில்லாமல் என்னை காப்பாற்றி இருக்கிறான். இருந்தாலும் அவனை தரிசிக்க போன இடத்தில் அவன் வாசல்படியிலேயே நான் விழலாமா? என்னை தாங்கி பிடிக்காமல் அவன் விடலாமா? என்று தோன்றியது முருகா அந்த நேரத்தில் நீ எங்கே இருந்தாலும் ஓடோடி வந்திருக்க வேண்டும் உன்னையே நம்பியிருக்கும் அபலையான என்னை கீழே விழாமல் தூக்கி பிடித்திருக்க வேண்டும். அப்படி நீ



செய்தால் உன்னை தீண்டும் பாக்கியத்தை நான் பெற்றிப்பேனே என்று தோன்றியது.

அதனால் அழுகை வந்தது அழாதே என்றாள் தாதி கண்களை மூடிக்கொண்டு வெகுநேரம் இருந்தேன் ஆலையத்தில் பார்த்த இறைவனின் திருமேனியை என் மன கண் முன்னால் நிறுத்தி ரசித்தவண்ணம் படுத்து கிடந்தேன்.

அப்போது எனது நெற்றியை ஒரு சின்ன குழந்தை தொடுவது போல உணர்வு ஏற்பட்டது. வாளைபூவின் இதழ்களை போன்ற சிறிய விரல் என் நெற்றியில் தடவுவது நன்றாக தெரிந்தது. கண்ணீரால் ஈரமாகி ஒட்டிகொண்டிருந்த இமைகளை சிரமப்பட்டு பிரித்தெடுத்து கண் திறந்தேன். என் முகத்திற்கு பக்கத்தில் தாமரை மலர் போன்ற முகம்கொண்ட ஒரு சிறு குழந்தை நின்றது. அதன் முகமும் அதன் கண்களும் கொள்ளையழகு என்றால் அதுகூட குறைவான வார்த்தை தான் சூரிய பிரகாசத்தில் சந்திரனின்

aanmeegamalar.com



குளிர்ச்சியை அந்த முகத்தில் கண்டேன். குழந்தை என்னை பார்த்து சிரித்தது பவளம் போன்ற அதன் இதழ்கள் என் இதயத்தை கனக்க செய்தது.




சிரமப்பட்டு கைகளை தூக்கி குழந் தையின் தலையை தொட்டேன் தொட்ட நான் என்னை மறந்தேன் நானிருக்கும் மருத்துவமனையை மறந்தேன். ஏன் இந்த உலகத்தையே மறந்தேன். நானும் அந்த குழந்தையும் மட்டுமே உலகத்தில் இருக்கிறோம் மற்ற யாரும் எதுவும் இல்லவே இல்லை என்ற உணர்வு தலைக்கேரியாது.

என் கைகளில் கிடைத்த பட்டு போன்ற குழந்தையின் தலைகேசம் சிலிர்ப்பை ஏற்படுத் தியது. என் முகத்தை குழந்தையின் முகத்தோடு இணைத்தேன் என் கிழட்டு உதடுகளால் இளமை ததும்பும் குழந்தையின் கன்னத்தில் மாறி மாறி முத்தமிட்டேன். இதுவரை எனக்குள் எரிந்து கொண்டிருந்த பெரும்நெருப்பு அணைவது போலிருந்தது. குமுறி கொண்டிருந்த எரிமலை குளிந்தது போலிருந்தது பிறந்த நாள் முதல் இன்றைய நாள் வரை எனக்குள் வீசிகொண்டிருந்த சூறாவளி திடிரென ஓய்ந்தது போலிருந்தது.



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

ஆம் முருகனை நெஞ்சார அணைக்க வேண்டும் ஆரத்தழுவி முத்தமழை பொழிய வேண்டும். என்ற ஆசை நிறைவேறியது போல உணர்ந்தேன். இந்த உணர்ச்சியும் ஆனந்தமும் ஐந்து நிமிடங்கள் நீடித்திருக்கலாம். அதற்குள் எனது கைகளுக்குள் சிக்கி என்னை பரமானந்த நிலைக்கு கொண்டு சென்றுகொண்டிருந்த குழந்தை நிமிட நேரத்தில் மறைந்துவிட்டது.

கையில் கிடைத்த வானம் கைநழுவி விட்டதே என்ற வருத்தம் ஒருபுறம் இருந்தாலும் ஆசையே வடிவெடுத்த பாவங் களையேதொழிலாககொண்டஇந்த அரைகிறுக்கு கிழவியின் வேண்டு தலை கூட என் ஞானதேசி கன் மறக்கவில்லையே என்னையும் ஒரு பொருட்டன நினைத்து தரிசனம் கொடுத்தானே ஞானிகளும், முனிவர்களும் தொடவே முடியாத அவன் திவ்விய சரீரத்தை என்னை தொட அனுமதித்தானே என்பதை நினைக்கும் போது அழுகை மட்டும் தான் வருகிறது.

முருகன் என்பவன் கற்பனையல்ல கதையல்ல கல்லால் செய்த

சிலையுமல்ல அவன் சாஸ் வதமான நிஜம் சக்தியமான உண்மை அவனை அழைத்தால் அவனே கதியென்று விழுந்து வணங்கினால் அவனை விட்டால் வேறு யாரு மில்லை என்று சரணாகதி அடைந் தால் அவன் வருவான் கண்டிப்பாக வருவான் கோல மயிலேறி நம் குடிசைக்கு வருவான்.

இது நிச்சயம் சுவாமி சந்தேகமே வேண்டாம் முருகனை நம்புங்கள் அவன் திருப்புகழை பாடுங்கள் அவனிருக்கும் இடம் நோக்கி தரிசனம் செய்ய நகருங்கள் நீங்கள் அவனை நோக்கி ஒரே ஒரு அடி எடுத்து வைத்தாலும் அவன் உங்களை நோக்கி இரண்டு அடி எடுத்து வைத்து வருவான் வரம் தருவான் திருவருள் புரிவான் என் அனுபவத்தை ஊருக்கெல்லாம் சொல்லுங்கள் என்னை பைத்தியமென்று பலர் பரிகசித்தாலும் சக்தியத்தை உரக்க சொல் லுவேன் என்று அந்த அம்மையார் கடிதத்தை முடித்திருந்தார்.

மற்ற கடிதங்களும் மின்னஞ்சல்களும் தொலைபேசி உரையாடல்களும் ஏறக்குறைய இந்த அம்மையாரின் அனுபவத்தை போலவே இருந்தது அவைகளை காணும் போது முருகன் என்ற மூர்த்தியின் மீது மக்களுக்கு உள்ள அதீதமான பக்தியின் ரகசியம் நன்றாக புரிந்தது தமிழ்கூறும் மக்களிடத்தில் முருகபக்தியானது வளமோடு செழித்து வளர்ந்து நிற்பதற்கு மூல காரணமே முருகனின் ஒயாத திருவருள் அலை தான் என்பது நன்றாக தெரிந்தது அறிவை கொண்டு ஆராய்பவர்களுக்கு இது மூடத்தனமாக தெரியலாம் ஆனால் இதயத்தை கொண்டு உலகத்தை பார்ப்பவர்களுக்கு இது தான் ஞான வெளிச்சமாக தெரியும்.

முருகன் மீது தமிழர்கள் கொண்ட பக்தி இன்று நேற்று வந்ததல்ல கல்தோன்றி மண்தோன்றா காலத்தே வந்தது என்று சொல்லலாம் பண்டைய தமிழகத்தில் குறிஞ்சி நில தெய்வமாக சேயோன் என்ற முருகனே வழிபட்டான் தொல்காப்பியம் கூட சேயோன் மேய மைவரை யுலகமும் என்று கூறுகிறது.

பத்துபாட்டில் நக்கீரர் பெருமான் அருளிய திருமுருகாற்று படையும் தொகைநூலில் ஒன்றாகிய பரிபாடலில் செவ்வேள் பாடல்களும் முருகனின் பெருமையை முருகனின் அருமையை முருகனின் வழிபாட்டு தொன்மையை நமக்கு தெளிவாக காட்டுகிறது.

சிலப்பதிகாரத்தில் வரும் குன்றக்குரவை பகுதியும் இந்திரவிழா காதையில் வரும் அருமுருக செவ்வேள் அணித்திகழ் கோயிலும் என்ற குறிப்பும் திருமுருகனின் வழிபாட்டு வரலாறை நமக்கு காட்டும் இப்படி பல தமிழ் நூல்களும் வடமொழி நூல்களும் முருகனை பற்றி கூறுகின்ற பல விஷயங்களில் சிலவற்றையாவது வரும் பதிவுகளில் சற்று விரிவாக பார்ப்போம்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
போன்: 09442426434

# பள்ளூர் ஸ்ரீ வாராஹி அம்மன் ஆலயத்தில் மகா யாகம்



நமது பாரத தேசத்தின் பழமையான, புராதனமன மண்ணில் புதையுண்ட சிவ, வைணவ ஆலயங்களை மீட்டெடுத்து இதுவரை 1500 க்கும் மேற்பட்ட சிவலிங்கங்களை பிரதிஷ்டை செய்து சோழர் காலத்து வரை நாம் பின்பற்றி வந்த சித்தர் அறிவியல் முறையை மீட்டெடுத்து, தஞ்சைப் பெருவுடையார் ஆலயத்தில் அஸ்திர கலச யாகம் நடத்தி, கும்பாபிஷேகத்தை பூர்த்தி கண்டு மகா குரு அகஸ்தியரின் திருவடி பணிந்து தடம் பதித்துக்கொண்டிருக்கும் அகஸ்திய சிவஸ்ரீ அன்புச் செழியன் ஐயா அவர்களுடைய சீரிய தலைமையில் சுபகிருது வருடம் பங்குனி மாதம் 10 நாள் 24.03. 2023 அன்று வெள்ளிக்கிழமை பள்ளூர் ஸ்ரீ வாராஹி அம்மன் ஆலயத்தில் மகா யாகம் நடைபெற இருக்கிறது. இந்த நிகழ்வில் பங்கு பெற்று பலனடைய வேண்டுகிறோம்.

மேலும் தொடர்புக்கு அகஸ்தியகிருபா
+91 9600566429

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!



# கடினமான பற்களுக்கு நடுவில் மென்மையான நாக்கு

இரவில் இலங்கையின் தெருக்களில்உலா வந்த அனுமன், ஒரு வீட்டில் இருந்து வரும் ஸ்ரீராமரின் முழக்கங்களைக் கேட்டதும் திடுக் கிட்டாரன். அவை சத்தமாக இல்லை, ஆனால் ஜன்னல்கள் வழியாக கிசு கிசுத்தன.

ராவணன் ஆட்சி செய்யும் நகரத்தில் என் ராமனின் திருநாமத்தை யார் உச்சரிப் பது என்று அனுமன் யோசித் தான்.

ஒரு வீட்டின் வெளியேதுளசி செடிகள் கொத்தாக இருந்தன, சுவர்களில் ஸ்ரீ ஹரியின் அடை யாளங்கள் இருந்தன.

அப்போது ஒருமனிதன் முன் கதவைத் திறந்து புனித நாமத்தை உச்சரித்த படி வெளியே வந்தான்.

வானத்தில் நட்சத்திரங்கள் ஒளிர்ந்தது, விடியற் காலை யில் இரண்டு மணிநேரம் இருந் தது. அந்த மனிதர்

துளசிச் செடிகளுக்குத் தண்ணீர் கொடுத்தார். அனுமன் துள்ளிக் குதித்து அவன் முன் கைகளை கூப்பி நின்றான். அந்த மனிதன் தன்னை ராவணனின் சகோதரன் விபீஷணன் என்று அறிமுகப்படுத்தினான்.

நீங்கள் ஒரு பக்தர் மற்றும் உன்னத ஆத்மா என்று சொல்லி அனுமன் கேட்டார் "இது என்னை குழப்புகிறது". பூமியில் நீங்கள் எப்படி பேய்களுக்கு மத்தியில் வாழ்கிறீர்கள்?" என்று. விபீஷணன் சிரித்துக்கொண்டே "நாக்கு வாயில் வாழ்வது போல" என்றான்.

முப்பத்திரண்டு பற்களைக் கடித்து அரைத்துக் கொண்டு, அதைச் சுற்றி, நாக்கு தீண்டாமல் இருப்பது மட்டுமல்ல, எல்லாச் சுவையையும் அனுபவிக்கிறது. நாக்கில் உட்கார்ந்து உருளும் உணவையே பற்களால் மென்று மென்று விழுங்கினாலும், இந்த பாம்பு போன்ற நாக்கு சிறிய காயமடையாமல் தப்பிக்கிறது.

நமக்கு நினைவாற்றல் குறையும்போதுதான் அது காயமடைகிறது. ஏன்?

தத்துவ ரீதியாக முக்கிய வேறுபாடு நெகிழ்வுத் தன்மை. நாக்கின் நெகிழ்வுத்தன்மையே அதன் நீண்ட ஆயுளுக்கு முக்கியமாகும். அதனால்தான் பற்கள் வேர் கால்வாய்கள் மற்றும் ஒட்டைகள் பெறும்போது அது சுவை பெறுகிறது. ஆனால் யாரும் தங்கள் நாக்கை இழப்பதில்லை.

நாக்கு கற்றுக்கொடுக்கிறது..மற்றவர்கள் அரைத்து கடிக்கலாம் ஆனால் நீங்கள் நெகிழ்வாக இருந்தால் வாழ்க்கையை அனுபவிக்கலாம். சற்றே தளர்ந்து போனால் எல்லாமே காயம் குறையும், தொல்லை குறையும்.. அப்போது அமைதியும் மகிழ்ச்சியும் உண்டாகிறது.

இனிமையாக, மரியாதையாகப் பேசுங்கள். சுற்றியுள்ள உலகம் உண்மையைக் கவனிக் கிறது, ஆனால் நீங்கள் எப்படி உண்மையைச் சொல்கிறீர்கள் என்பதில் அது அதிக அக்கறை கொண்டுள்ளது. நீங்கள் நிலையான அமைதியையும் மகிழ்ச்சியையும் விரும்பினால், உங்கள் நாவிலிருந்து கற்றுக் கொள்ளுங்கள், அதைப் போலவே வாழுங்கள். நட்பாக, அடக்கிவிடு.. இது உங்கள் உறவுகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

ஆன்மிகமலர்.காம்

## வேலூர், ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி பீடம் சார்பில்

# தமிழ் வேதம், சைவமுறை பூஜை பாடசாலை துவக்கம்

வேலூர், ஸ்ரீபுரம், ஸ்ரீ நாரா யணி பீடம் சார்பில் தமிழ் வேதம் மற்றும் சைவ முறை பூஜைபாட சாலைக்கு மாணவர்கள் சேர்க்கை குறித்த அறிவிப்புவெளியிட்டுள்ளது.



"கலியுக வைகுண்டம்" என்று பக்தர்களால் அழைக்கப்படும் ஸ்ரீபுரத்தில் ஸ்ரீ நாராயணி தமிழ் வேதம் மற்றும் சைவ முறை பூஜை பாட சாலை விரைவில் துவங்கப்பட உள்ளது. இந்த பாட சாலையில் தமிழ் வேதங்களான தேவாரம், திரு வாசகம், அபிராமி அந்தாதி மற்றும் சித்தர்கள் அருளிய மந்திர யந்திர முறைகளும்,

பல திருக்கோயில்களில் சிவ பூஜை செய்வதற்கு அடிப்படையான வேத மந்திரங் களும் கற்றுத் தரப்படும்.

10 வயது முதல் 20 வயது வரை உள்ள வர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். பாட சாலையிலேயே தங்கி படிக்க வேண்டும். பயிற்சி காலம் 3 ஆண்டுகள். பயிற்சியில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு உணவு தங்கும் இடம் அனைத்தும் இலவசமாக வழங்கப்படும்.

பயிற்சி முடிந்த பிறகு உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் உள்ள சிவாலயங்களில் ஓதுவார் களாகவும் மற்றும் பூஜை செய்யும் ஆச்சாரியார்களாகவும் நியமிக்கப் பட ஏற்பாடு செய்யப்படும்.

பயிற்சி பெற விரும்பும் மாணவர்கள் தங்கள் புகைப்படம், ஆதார் கார்டு நகல் உள் பட அனைத்து விவரங்களுடன் கீழ்கண்ட முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

– ஸ்ரீபுரம், நாராயணி பீடம்,
வேலூர் செல்: 9894176811

# ஆன்மீக வழியில் அமைதி



62

ஈஸ்வரன் இரண்டு தத்துவங்களாக இருக்கிறார். ஒன்று மாயை என்னும் தத்துவம் மற்றொன்று அறிவு ஸ்ரூபம் என்ற தத்துவம். மாயை என்பது உடல் என்றால் ஈஸ்வரன் அறிவு ஸ்ரூபம் ஞான ஸ்ரூபம். அதாவது உடலாகிய மாயையில் இருந்து ஈஸ்வரன் அறிவு ஸ்ரூபமாக ஞான ஸ்ரூபமாக இருந்து இந்த பிரபஞ்சத்தை உருவாக்குகிறார். படைப்பவன் இல்லாமல் ஒரு பொருளை உருமாற்றம் செய்யவோ படைக்கவோ முடியாது. இந்த பிரபஞ்சத்தைப் படைத்தவர் ஈஸ்வரன். இந்த பிரபஞ்சத்தை ஈஸ்வரன் எப்படிப் படைத்தார் என்றால் மாயை என்னும் உடலிலிருந்து பிரம்ம தத்துவம் என்னும் அறிவு ஸ்ரூபமாக ஞான ஸ்ரூபமாக இருந்து இந்த மாயை என்னும் உலகத்தை படைத்தார். அதாவது ஈஸ்வரன் மாயை என்னும் பிரபஞ்சத்தை படைக்கிறார்.

மாயை என்றால் ஒன்றும் இல்லாதது என்று பொருள். இந்த மாயை தனித்து சுதந்திரமாக இயங்க முடியாது. மாயை பிரம்ம தத்துவத்தைச் சார்ந்துள்ளது. இந்த மாயை பிரம்ம தத்துவத்தை சார்ந்து இருப்பதால் அது பிரம்மத்திடமிருந்து அறிவு ஸ்ரூபத்தையும் இருப்பையும் வாங்கிக்கொள்கிறது. பொதுவாக நாம் செய்யக்கூடிய காரியத்தில் செயல்பாடுகளில் என்னென்ன குணங்கள் இருக்கிறது என்பதை ஆராய்ந்து பார்க்கும்போது அதனுடைய காரணத்தை அறிந்து கொள்ள முடியும். எனவே உலகில் காரணம் இல்லாமல் காரியங்கள் செயல்பாடுகள் எதுவும் நடைபெறுவதில்லை. பொதுவாக உலக வழக்கில் ‘அவன் ஒரு காரியத்தை செய்தால் காரணம் இல்லாமல் செய்யமாட்டான்’ என்று கூறுவதைக் கேட்டு இருக்கிறோம். அதாவது ஒரு மனிதன் செய்யக்கூடிய காரியத்தை வைத்து அல்லது செயல்பாடுகளை வைத்து அவனுடைய குணங்களை காரணங்களை எளிதில் அறிந்து கொள்ள முடியும்.

எடுத்துக்காட்டாக ஒரு தங்கக்கட்டியைக்



கொடுத்து நகைகள் செய்யும்படி பொற்கொல்லனிடம் கூறுகிறோம் என்று வைத்துக்கொள்வோம். அவன் தங்கக்கட்டியை உருக்கி நாம் விரும்பும் நகையை செய்து கொடுக்கிறான். தங்கம் நகையாக மாறி விட்டது. நகைகளை உருவாக்கிய பிறகு அதன் தன்மையை ஆராய்ந்து பார்க்கும்போது அதில் செம்பு என்ற உலோகம் எந்த அளவுக்கு சேர்க்கப்பட்டுள்ளது என்பதை ஆராய்ந்து அறிந்து கொள்கிறோம். செம்பு என்ற உலோகம் அதில் அதிக அளவு சேர்ந்திருந்தால் நகையைச் செய்த பொற்கொல்லன் நம்மை ஏமாற்றி விட்டதாக நாம் கூறுகிறோம்.

அதுபோல் ஈஸ்வரன் படைத்த இந்த பிரபஞ்சத்தை அல்லது இந்த உலகத்தின் தன்மையை ஆராய்ந்து பார்த்தால் அதில் நல்லவைகள் தீயவைகள் இரண்டும் கலந்துதான் காணப்படுகிறது. இந்த உலகத்தில் வாழும் மனிதனின் செயல்பாடுகளில் குணங்களில் தீயவைகள் அதிகம் இருந்தால் அது மாயையின் தன்மை என்று கூறப்படுகிறது. அதேபோல் மனிதனுடைய குணங்களில் செயல்பாடுகளில் நல்லவைகள் அதிகம் இருந்தால் அது ஈஸ்வரன் தன்மை என்று கூறப்படுகிறது. அதாவது இந்த உலகத்தில் வாழ்பவர்களில் நல்ல செயல்பாடுகளில் ஈடுபட்டவர்களை நல்லவர்கள் என்று அழைக்கிறோம். தீய செயல்பாடுகளில் ஈடுபட்டவர்களை தீயவர்கள் என்று




ஆன்மிகமலர்
மெயில் புக்

ஆன்மிகமலர்.காம் இணையதளத்தின் வாயிலாக வெளிவரும் ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்

140 இதழ்களையும்

இலவசமாக டவுன்லோடு செய்ய கீழே உள்ள ஸ்கேனரை கிளிக் செய்யவும்...

Scan to Read-
aanmeegamalar
E-magazine

அழைக்கிறோம். ஈஸ்வரன் படைத்த பிரபஞ்சத்தில் நல்லவர்களும் கெட்டவர்களும் கலந்து காணப்படுகிறார்கள். ஈஸ்வரன் தன்மைகள் ஒரு மனிதனிடம் அதிகம் இருந்தால் அவன் நல்லவனாகக் கருதப்படுகிறான். அதாவது வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்று வடலூர் வள்ளல் பெருமான் கூறியதைப்போல் பிரபஞ்சத்தில் எல்லா உயிர்களையும் தன் உயிர்போல் நினைத்து வாழ வேண்டும். அவ்வாறு வாழும்போது மனிதன் தேடும் விரும்பும் அமைதி கிடைக்கும்.

இந்த பிரபஞ்சம் ஜடம், செயல்படுதல் தன்மை, அறிதல் தன்மை (knowledge) என மூன்று பிரிவுகளாக காணப்படுகிறது. அதாவது ஜடம், செயல்படும் சக்தி, அறிதல் சக்தி என்பதாகும். ஜடம் என்பது தமோ குணமாகவும், செயல்படுதல் சக்தி என்பது ரஜஸ் குணமாகவும், அறிதல் சக்தி என்பது சத்துவ குணமாகவும் இந்த பிரபஞ்சம் மூன்று குணங்களுடன் செயல்படுவதாக சாஸ்திரம் கூறுகிறது. உலகில் காணும் மலைகள், பாறைகள், மணல் போன்றவை ஜடத்தன்மை உடையவை. பறவைகள், விலங்குகள், ஊர்வன செடிகொடிகள் போன்றவை செயல்படுதல் தன்மை உள்ளவை. மனிதர்கள், காட்டில் தவம் செய்து வாழும் முனிவர்கள் போன்றவர்கள் அறிவுடன் செயல்படும் தன்மையுடைவர்கள்.

மாயையிடம் தமோ, ரஜஸ், சத்துவ என மூன்று குணங்கள் அல்லது சக்திகள் இருக்கின்றன. மாயை தமோ, ரஜஸ், சத்துவம் என மூன்று குணங்களுடன் படைக்கப்பட்டுள்ளது. அதாவது இந்த உலகத்தில் எவ்விதமான அசைவும் இல்லாமல் இருக்கும் மலைகள், பாறைகள் போன்று அசைவற்றநிலையில் இருக்கும் பொருள்கள் ஜடமாகக் கருதப்படுகிறது. ஜடமாக இருப்பது ஜடப்பொருள்கள் ஆகும். செயல்படும் சக்தி என்பது பிரபஞ்சத்தில் தோற்றம் வளர்ச்சி அசையும் தன்மையுடைய செடிகொடிகள், விலங்குகள் பறவைகள், ஊர்வன போன்றவையாகும். அறிதல் சக்தி என்பது ஜடம்போன்று இல்லாமல் அறிவுடன் கூடிய செயல்படும் சக்தி மனிதர்கள், காட்டில் தவம் செய்யும் முனிவர்கள் போன்றவர்கள். மாயை என்பது தமோ, ரஜஸ், சத்துவ என்னும் மூன்று குணங்களின் தன்மையுடையது. அதாவது இந்த பிரபஞ்சம்



எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்

மூன்று குணங்களின் தன்மையில் இயங்குகிறது.

பிரம்மத்தை மறைத்து, நிலையில்லாத பொருளை நிலையானது எனக் காட்டுவது மாயை என்று அத்வைதம் கூறுகிறது. உலகம் தன்னிலிருந்து தோன்றுவதற்கும், தன்னில் வந்து ஒடுங்குவதற்கும் அடிப்படைத் தத்துவம் இந்த மாயை ஆகும். மாயை தனித்து இயங்குவதற்கு முடிவதில்லை. பொதுவாக மாயை என்றால் தெளிவில்லாமை, குழப்பம், மறைந்து போகக்கூடிய தன்மைகளை உடையது.

பிரம்மத்தின் ஒரு சிறு அம்சமே மாயை ஆகும். இந்த மாயை சத்துவ குணம், ரஜோ குணம், தாமச குணம் என்னும் முக்குணங்களின் தன்மைகளை உடையது. மாயை ஐந்து பூதங்களைத் தோற்றுவித்தது. மாயை தோற்றுவித்த ஐந்து பூதங்களும் நிலையற்றவை. நிலையாக தோன்றுவதுபோல் தோற்றமளிக்கும் வானில் காணப்படும் விண்மீன்களும் ஒரு காலத்தில் அழிந்து விடும் என மாயை பற்றி சங்கர வேதாந்தம் தெளிவாக கூறுகிறது. இவையெல்லாம் பிரளயத்தின்போது பிரம்மத்திடம் ஒடுங்கி விடுகிறது. பிரம்மத்திற்கு முதலும் முடிவும் இல்லையோ அதேபோன்று இந்த மாயை என்பதற்கும் ஆதியும் அந்தமும் இல்லை என்று சங்கர வேதாந்தம் கூறுகிறது. காரணம் மாயை பிரம்மத்தைச் சார்ந்து இருக்கிறது.

மாயை உடலில் இருந்து அறிவு ஸ்ரூபமாக இருப்பவன் கடவுள் என்று சாஸ்திரம் கூறுகிறது. மாயை பிரம்ம தத்துவத்தைச் சார்ந்து இருப்பதால் சத்துவ, ரஜோ, தமோ என மூன்று குணங்களின் தன்மையுடன் இருக்கிறது என சாஸ்திரம் கூறுகிறது. மாயை என்னும் உடலுடன் கூடிய அறிவு ஸ்ரூபம் ஞான ஸ்ரூபம் ஈஸ்வரன். அவர் பிரபஞ்சத்தின் அனைத்துப் பகுதிகளையும் படைத் தவர்என்று சாஸ்திரம் கூறுகிறது. நமது மனம் குழப்பத்தில் அல்லது துன்பத்தில் இருக்கும்போது பிரபஞ்சம், மாயை, ஈஸ்வரன் பற்றி இப்படி ஆன்மீக சிந்தனைகளில் மூழ்கும்போது நாம் துன்பங்களில் இருந்து விடுபட்டு மனம் பக்குவமடைவதோடு நாம் விரும்பும் தேடும் அமைதி ஓரளவுக்கு கிடைக்கும். .

– அமைதி தொடரும்

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd) கைபேசி: 9894043308

# நம்ம ஊரு கோவில்

**உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வாயிலாக டைப் செய்து அனுப்புங்கள்.**

**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

**பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.**

தொடர்பு எண்: 9444228203

இ-மெயில் முகவரி:

aanmeegamalar@gmail.com





# பல்வேறு கிழங்குகளைக் கொண்டு நடைபெற்ற வராகி ஹோமம், பஞ்ச திரவிய அபிஷேகம்

வாலாஜாபேட்டை ஸ்ரீ தன்வந்திரி ஆரோக்ய பீடத்தில் ஸ்தாபகர் மற்றும் பீடாதிபதி யக்ஞஸ்ரீ கயிலை ஞானகுரு டாக்டர் ஸ்ரீ முரளிதர ஸ்வாமிகளின் ஆசிகளுடன் 12.03.2023 ஞாயிற்றுக்கிழமை வாராகி ஹோமத்துடன் பஞ்ச மஹா யக்ஞம் நடைபெற்றது.

12.03.2023 ஞாயிற்றுக்கிழமை பஞ்சமி திதியை முன்னிட்டு வாழ்வில் வளம் பல பெறவும், அனைத்து காரியங்களிலும் வெற்றி பெறவும் சூலினி, காளி, திரிபுர பைரவி, பகுளாமுகி, வாராகி என பஞ்சமுகங்களுடன் எழுந்தருளி அருள்பாலிக்கும் ஸ்ரீ பஞ்சமுக வாராகிக்கு விசேஷ மூலிகைகள், மஞ்சள் கிழங்கு, கோரைக்கிழங்கு, சேனைக்கிழங்கு, போன்ற எண்ணற்ற கிழங்கு வகைகளைக் கொண்டு சிறப்பான வாராகி ஹோமமும் பஞ்ச திரவிய அபிஷேகம், அர்ச்சனை மற்றும் வாராகி தீபம் ஏற்றப்பட்டது. அதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வாராகி அம்மனை தரிசித்து சென்றனர்.

06.03.2023 திங்கள்கிழமை மாசிமகம் ஸ்ரீ ஐஸ்வர்ய பித்யங்கிரா தேவியின் பிரதிஷ்டா தின வைபவம் மற்றும் வாஸ்து நாளை முன்னிட்டு விஷேச மூலிகைகளைக் கொண்டு சிறப்பு ஹோமமும் ஸ்ரீ ஐஸ்வர்யபிரத்யங்கிரா தேவி, ஸ்ரீ வாஸ்து பகவானுக்கு பஞ்ச திரவிய அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து பௌர்ணமியை முன்னிட்டு 7.3.23 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு ஆண்கள் திருமணத் தடை நீங்க கந்தர்வ ராஜ ஹோமமும் பெண்கள் திருமணத் தடை நீங்க சுயம்வர கலா பார்வதி ஹோமமும் தம்பதிகள் குழந்தை பாக்கியம் பெற சந்தான கோபால யாகமும் அன்ன தோஷங்கள் விலக ஸ்ரீ ராகு கேதுவிற்கு அன்னாபிஷேகம் நடைபெற்று மூலவர் ஸ்ரீ ஆரோக்யலக்ஷ்மி சமேத தன்வந்திரி பெருமாளுக்கு ஐந்தாவது நாளாக 108 நாட்கள் 108 கலச திருமஞ்சன திருவிழா சுமங்கலி பூஜையுடன் நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள், சுமங்கலி பெண்கள், கலந்து கொண்டு திருவருளுடன் குருவருளையும் பெற்று சென்றனர். பக்தர்கள் அனைவருக்கும் அன்னபிரசாதம் வழங்கப்பட்டது.

# ஸ்ரீ மச்சபுரீஸ்வரர்

## பெருமாளின் தோஷத்தை நீக்கிய சிவன் மீன இராசிக்காரர்களுக்கு பரிகாரத்தலம்





"இந்த மண்ணுலகில் எப்போதெல்லாம்அதர்மம் தலைநிமிர்கின்றதோ அப்போது நான் அவதாரம் எடுப்பேன்" என்கின்றார் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா. அப்படி பரந்தாமனாகிய திருமால் எடுத்த அவதாரங்கள் மொத்தம் பத்து. அவற்றுள் முதன்மையானது மச்ச அவதாரம். அதாவது மீன் அவதாரம். இந்த அவதாரத்தின் நிகழ்வுகள் பற்றிய உண்மைகளை விவரிப்பதே 18 புராணங்களுல் ஒன்றான மச்ச புராணம்.

மச்ச புராணப்படி இரண்டு அற்புதங்களை நிகழ்த்துகின்றார் ஸ்ரீமன் நாராயணர். ஒன்று... சத்யவிரதன் மூலமாக பிரளயத்திலிருந்து உயிர்களைக் காத்தது. மற்றொன்று... பிரம்மனால் தவறவிடப்பட்ட வேதங்களை மீட்டது.

மச்ச அவதாரம் :

ஸ்ரீ ஹரி மீது பேரன்பு கொண்டவன் சத்ய வரதன் என்னும் திராவிட தேசத்து மன்னன். தண்ணீரை மட்டுமே பருகி, ஸ்ரீ வேங்கடேசரை நினைத்து கடும் விரதம் இருந்தான். நீருக்கு உரிய நாராயணர் இம்மன்னன் மீது கருணை





கொண்டு திருவருள் புரிந்திட திருவுளம் கொண்டார்.

சிறிய மீனாக ஆற்றில் நீந்தினார். அப்போது நித்திய கடன்களை முடித்திட ஆற்றுக்கு வந்த சத்தியவிரதன் தனது கைகளால் ஆற்று நீரை எடுத்தார். அதில் மீனுருவில் உலவினார் மத்ஸ்ய நாராயணர். தன்னை மீண்டும் நீரில் விட வேண்டாம் என்றும், அப்படிவிட்டால் பெரிய மீன்கள் தன்னை தின்றுவிடுமென்றும் கோரிக்கை வைத்தது.

அந்த மீனை தனது கமண்டலத்தில்விட்டுக் கொண்டு அரண்மனைக்கு சென்றான் மன்னன். அதற்குள் அம்மீன் கமண்டலத்தையே நிறைத்துவிட்டது. அதன் வளர்ச்சியைக் கண்டு திகைத்த மன்னன், அதை பெரியதொரு பாத்திரத்தில் இட்டான். மீண்டும் பெரிதாக வளர்ந்தது. குளத்தில் விட்டான். குலமும் நிரம்பியது. தனது வீரர்கள் மூலமாக கடைசியாக கடலில்விட்டான். கடலும் போதவில்லை. கடலே காலளவு நீராகிப்போனது. அந்த அளவிற்குப் பெரிதானது அம்மீன்.

இது உலகத்தை காத்து ரட்சிக்கும் உலகளந்தானின் திருவிளையாடல்தான் என்கின்ற உண்மையை உணர்ந்தான் சத்தியவிரதன். அப்போது அங்கே அசரீரி ஒலித்தது.

பிரளயத்தை எச்சரிக்கவே நான் மீனுருவில் வந்ததாக வாக்குறைத்தார் வாசுதேவர். "சத்யவிரதா... பிரளயம் ஏற்படப்போகிறது. அதில் உலகம் அழியும். அப்போது எல்லாஉயிர்களையும் ஓர் பெரிய கப்பலில் ஏற்றி, கடலில் விட்டுவிடு. அக்கப்பலை நான் இந்த மீனாக தாங்கி உயிர்களைக் காப்பேன்" என்று அருள் மொழிந்தார்.

மன்னன் சத்யவிரதனும் அவ்விதமேசெய்தான் அவ்வாறே பிரளயமும் வந்தது. மன்னனும் ஓர் பெரிய கப்பலில் மனிதர்களோடு மட்டுமில்லாமல் மற்ற உயிரினங்களையும் ஏற்றி நீரில் நகர்ந்தான். பிரளயப் பெருவெள்ளத்தில அக்கப்பல் முழுகாதவாறு பரந்தாமனே மீனாய் இருந்து தாங்கினார். பிரளயம் முடிந்ததும், எல்லோரையும் நிலத்தில்விட்டு எல்லா உயிர்களையும் காத்தருளினார் ஏழுமலைவாசன்.



**வேதங்களை மீட்டது:**

பிரளயம் ஓய்ந்தது. மீண்டும் படைக்கும் கடமையை ஆரம்பித்தார் பிரம்மா. அப்போது சோர்வு மிகுதியால் சற்றே கண்ணுறங்கினார். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட கோமுகாசுரன் படைப்பிற்கு மூலாதாரமான நான்கு வேதங்களைக் கவர்ந்து கடலுக்கு அடியில் சென்று பதுங்கிக் கொண்டான்.

இதனால் பிரம்மனின் படைப்புத் தொழில் முடங்கியது. உலகமும் ஓய ஆரம்பித்தது. பயந்த பிரம்மா திருமாலை சரணடைந்தார். அப்போது மச்சமூர்த்தியாய் கடலூர் வசித்த ஸ்ரீ ஹரி, கோமுகாசுரனை அழித்து, வேதங்களை மீட்டு பிரம்மனிடம் ஒப்படைக்கின்றார். காக்கும் கடவுளுக்கு நன்றி கூறிய பிரம்மன் மீண்டும் தனது படைப்புகளை திறம்பட படைக்கத் தொடங்கினார்.

ஆனால் நாராயணருக்கோ கோமுகாசூரனைக் கொண்ட தோஷம் சூழ்ந்தது. மீண்டும் பரமபதம் அடைய முடியாமல் தவித்தார். இதிலிருந்து விடுபட குடமுருட்டி ஆற்றின் தென்பால் சிவலிங்க பிரதிஷ்டை செய்து வழிபட்டார். மீனுருவில் வழிபட்டதால் இப்பதி மச்சபுரி என்றும், சேலூர் [சேல் = கெண்டை மீன்] என்றும் இருந்தது. தற்போது கோவில் தேவராயன்பேட்டை என்று வழங்கப்படுகிறது. இப்பதி ஈசர் ஸ்ரீமச்சபுரீஸ்வரர் என்று அழைக்கப்படுகின்றார்.

"மண்ணும் அக்கோவயில்சேர்
மான்மறிக் கையர்தம்
பொன்னடித் தலம்உறப்
புரிவொடுந் தொழுதேந்து
இன்னிசைத் தமிழ்புனைந்
திறை வர் சேலூருடன்
பன்னுபா லைத்துறைப்
பதிபணிந் தேகினார்".

திருஞானசம்பந்தர் இந்த பதியில் தேவாரம் பாடி சிறப்பித்துள்ளதை இவ்வாறு சேக்கிழார் தனது பெரிய புராணத்தின் 2262 ஆம் பாடலில் சான்று கூறியுள்ளார்.

ஆனால் சம்பந்தர் பாடிய தேவாரப் பாடல் நமக்கு கிடைக்க வில்லை என்பது வருத்தமளிக்கிறது.

காவிரியின் தென்கரைத்தலங்களுல் ஒன் றான இந்த தேவராயன்பேட்டை சோழர் காலத்தில் 'நித்த வினோதன நல்லூர் நாட்டு பிரம்மதேசம்' என்று வழங்கப்பட்டுள்ளது.

முற்கால சோழ மரபினர்களுக்குப் பிறகு எட்டாம் நூற்றாண்டில் மீண்டும் தஞ்சையில் புலிக்கொடி ஏற்றி பறக்கவிட்ட வெற்றிச்சோழன் என்னும் விஜயாலய சோழனின் மகனான முதலாம் ஆதித்த சோழனே (கி.பி. 871 கி.பி.907) இங்கு மச்சபுரீசர் ஆலயத்தை செங்கத் தளியாக (செங்கல் கட்டுமானம்) நிர்மாணித்தான்.



மோ.கணேஷ்

பின்னர் முதலாம் ஆதித்த சோழனது மகனான முதலாம் பராந்தகச் சோழன் (கி.பி. 907 கி.பி. 955) இக்கோவிலை கற்றளியாக (கல் கோவிலாக) மாற்றி அமைத்தான்.. பரந்தக சோழனின் வழிவந்த இராஜராஜச் சோழ னது சகோதரியான குந்தவை பிராட்டியார் இத்தல மீனீசரை வழிபட்டு, தானங்கள் பல வழங்கி யுள்ளது குறிப்பிடத்தக்கது.



அதோடு இவ்வூருக்கு இன்னொரு பெருமை யும் உண்டு. கந்தனது புகழை விவரித்துக் கூறும் கந்தர் சஷ்டிகவசத்தை இயற்றிய பாலன் தேவராயன் சுவாமி கள் பிறந்ததும் இந்த ஊரில் தான்.

பேருந்து சாலைக்கு உட் புறமாக அமைந்துள்ளது ஆலயம். முதலில் சிறிய வாயில். அதன் உள்ளே விசாலமான இடம். வலது இடது புறங்களில் நந்தவனம் காட்சி தர, நேராக முகப்பு கணபதியும், அவருக்கு பின்னே பலிபீடம், கொடிமரம் மற்றும் நந்தியம்பெருமான்.

முதல் வாயிலுள்நுழை கின்றோம்.இங்கு இராஜ கோபுரம் காணப்பட வில்லை. மண்டபத் திற்குள் நுழையும்முன் புடைப்புச் சிற்பமாக மீன் பூஜிப்பது போன்று வடிக்கப்பட்டுள்ளது சிறப்பு. கிழக்கு பார்த்த ஸ்நபன மண்டபம், மகா மண்டபம், அர்த்தமண்டபம், மூலஸ்தானம் ஆகிய அமைப்பில் ஸ்வாமி சன்னிதியும், ஸ்நபன மண்டபத்தில் தென் முகமாக அம்பாள் சன்னிதியும் அமைந்துள்ளன.

மூலஸ்தானத்தில் சிறிய திருமேனியராக காட்சி தந்தருள்கின்றார் ஸ்ரீ மச்சபுரீஸ்வரர். இவரது திருமுடி மீது மீன் பூஜிக்கும் கவசம் சாற்றப்படுகின்றது.

அம்பிகையாக ஸ்ரீ சுகந்த குந்தளாம்பாள் தென்முகமாக நின்றவண்ணம் கையில் ருத்ராட்ச மாலையும், நீலோற்பல மலரும் ஏந்தி அழகே வடிவாய் அருள் மழை பொழிகின்றாள்.

பிரகார வலம் வருகையில் தென்புறத்தில் வடக்கு திசை நோக்கும் ஸ்ரீ துர்காதேவி பெரிய தொரு திருமேனியளாக அருள்பாளிக்கின் றாள். உடன் சப்தமாதர்களும், நால்வர் திருமேனி களும் உள்ளன.

பொதுவான கோஷ்ட மூர்த்தங்கள் ஆலயத் தை அலங்கரிக்கின்றன. மேற்குத் திருமாளிகை பத்தியில் தல கணபதி, ஸ்ரீ விசாலாட்சி உடனுறை ஸ்ரீ காசி விசுவநாதர், வள்ளி தெய்வானை உடனுறை ஸ்ரீ ஷண்முகர், ஸ்ரீதேவி பூதேவி உடனுறை ஸ்ரீ வரதராஜர், ஐயப்பன், சரஸ்வதி, ஆஞ்சநேயர் மற்றும் ஸ்ரீ கஜலட்சுமி சன்னிதிகள் வரிசையாக அமைந்துள்ளன.

கிழக்குப்புறத்தில் சூரி யன், சனிபகவான் கால பைரவர் மற்றும் யோக பைரவர் வீற்றுள்ளனர்.

தல விருட்சமாக வன்னி மரம் உள்ளது. தல தீர்த்த மாக மச்ச தீர்த்தம் உள்ளது. இவ்வாலயத்தில் சோழர் கால கல்வெட்டுகள் சுமார் 55 உள்ளன.

கல்வெட்டில் இவ்வூர் சேயலூர் என்று குறிப் பிடப்பட்டுள்ளது. அதோடு இராஜகேசரிநல்லூர் என்றும் பிரம்மதேசம் என்றும் அழைக்கப்பட்டுள்ளது. கோயிலில் தினமும் திரு முறை ஓதிட ஓதுவார்களுக்கு நிவந்தங்கள் அளிக்கப் பட்டுள்ளது.

அதோடு இராஜராஜ சோழனது சகோதரி யான குந்தவைப் பிராட்டியார் தஞ்சை வைத்தியசாலை பராமரிப்புக்கு இவ்வூரில் நிலங்கள் கொடுத்துள்ளார். சாமவேத போட்டி நடத்தி, அந்தணர்களுக்கு பொற்காசுகள் பரிசாக வழங்கப்பட்டுள்ளது. இத்தலமே சேலூர் என்பதற்குச் சான்றாக அருகில் உள்ள இராஜகிரி என்னும் ஊரினை குறிப்பிட்டு கல்வெட்டுகள் வடிக்கப்பட்டுள்ளன. நான்கு கால பூஜைகள் நடைபெறும் இவ்வாலயம் தினமும் காலை 7 மணி முதல் 12 மணி வரையும், மாலை 5 மணி முதல் 8 மணி வரையும் திறந்திருக்கும்.1928 மற்றும் 2010இல் கும்பாபிஷேகம் நடந்துள்ளது. அனைத்து சிவாலய விசேடங்களும் இங்கு சிறப்புற அனுசரிக்கப்படுகின்றன.

மீன இராசிக்காரர்களுக்கு பரிகாரத்தலமாக திகழ்கின்றது. ஸ்ரீ சுகந்தகுந்தளாம்பிகை சமேத ஸ்ரீ மச்சபுரீஸ்வரரை வணங்கி, வழிபட்டு, வினைகள் யாவும் களைந்திடுவோம். தஞ் சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டத்தில் உள்ள இவ்வூர், பாபநாசம் தஞ்சாவூர் சாலையில் உள்ள பண்டாரவாடையில் இருந்து 2 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. ஆலய தொடர்புக்கு: கண்ணன் குருக்கள் 9790116821.

பழங்காமூர் மோ.கணேஷ்.

தொடர்பு எண்: 9789156179

# இறைஉணர்வை உணரும் மார்க்கம் புதையலாய் உள்ளது

உண்மையைச் சொன்னால் சில சமயம் அது கசப்பாக இருக்கும். எதற்கும்கவலைப்படாதே. நான் ஒரு உண்மை விரும்பி என்பதனால் சில யதார்த்த உண்மைகளை சொல்லுகிறேன் கேள். ஒரு உண்மையை ஆராய்ந்து சொன்னால் தேவையில்லாமல் தானாக வருவித்துக் கொண்ட இடிபாடுகளும், சில பிரிவினைவாதங்களும் எல்லாம் நம்முடையதே. இதை நாட்டிற்குள் தோற்றுவித்தவர்கள் நாமே. இந்த உண்மை கசப்பானதாக இருந்தாலும் நாம் அதை உணர வேண்டும். இன்றைய நாட்டின் கொடுமை என்னவென்றால் கட்சி சார்புள்ள மக்கள் அனைவரும் அதன் சிற்சில துணைக்குழுக்களும் தேசத்தில் அங்கும் இங்குமாய் உள்ள கசப்பான உண்மைகளை நம்மை விட நன்றாய் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் தேவையற்றவைகளை ஒழிக்க எந்த போராட்டமும் செய்வதே இல்லை. நாட்டில் ஒற்றுமையை எப்படி ஏற்படுத்துவது என்பதை சொல்லவே நான் இப்படி சொல்லுகிறேன். மக்களால் மிகவும் அதிகமாக நேசிக்கப்படுகின்ற அனைத்தும் நமது மொழிகளால் முடியும் என்று வாதிடுகின்ற இந்தி, தமிழ், வங்காளம் போன்ற மொழிகள் கூட நாட்டின் ஒற்றுமைக்கு பயன்படவேபயன்படாது. இவை எப்படி இந்தியாவை ஒற்றுமைப்படுத்தும்? ஒற்றுமை குர லுக்கு நாம் தேச உணர்வை பயன்படுத்துவதில்லை. நீண்ட நாட்களாகவே மொழிக்கொள்கையை மட்டும் நாட்டினுள் உபயோகப்படுத்தி அதையே பூசி மெழுகுகிறோம். இப்படி இச்செயல்களால் நாடு பன்னெடுங்காலமாக ஒரு துறையுள் தோல்வி அடைந்து விட்டது.



யதார்த்த நிலைமைகளை அறிந்தும் நாம் நம்முடைய சிந்தனையை உபயோகப்படுத்தி இனி மேலாவது தேச ஒற்றுமைக்கு புதிய உத்தியைக் கண்டுபிடிக்க வேண்டும். இந்தியாவிலுள்ள மொழிகள் பெரியதாயும் சிறியதாயும் செழிப்பு வனப்பாய் இருந்தாலும் கூட எதுவுமே தேச ஒற்றுமைக்கு பயன்படாது. இத்தகைய அனுபவங்களை கொண்டு நாம் நமது புத்தியை இயக்கி நம்முடைய உண்மைப் பணியைக் கண்டுபிடித்து வேலையைத் துவக்க வேண்டும்.

• • •

தேச ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு எந்த சொல்லிலே கருத்து பொதிந்து கிடக் கிறது சொல்லுங்கள். இந்திய மக்களின் உள்ளக் கிடக்கையும் ஒற்றுமை துடிப்பும் என்ன? ஒரே வழி சொல் கிறேன். அவ்வழி, மதப்பற்று உள்ளவர்களும் மதத்தை வாதத்திற்கு எடுத்துக் கொள்ளாதவர்களும் குறைந்தபட்சம் மதம், சமயம் என்ற சொற்களையாவது நாட்டின் தேசிய ஒற்றுமைக்கு எடுத்துக்கொண்டு ஒப்புக் கொள்ள வேண்டும். மனித சமுதாயத்தின் இதய ஒற்றுமைக்கும் தேசியம் என்ற வார்த்தையை பிரச்சாரம் செய்வதற்கும் நமக்கு தைரியம் வர வேண்டும். இது இல்லை என்றால் நாம் கடைசி வரை பல மொழிகளால் பிரிந்து நிற்கின்ற மக்களாகவே இருப்போம்.

• • •

இந்துமதம் உட்பட உலக மதங்கள் அனைத்திலும்அற்புதமான அழகான பல கருத்துக்கள் இருக்கின்றன. அவைகள் சுதந்திரமான ஒரு ஆணையும், பெண்ணையும் கூடவே அவர்களின் சுதந்திரச்



ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203

♦♦♦

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622

♦♦♦

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா
வேல் செல்

♦♦♦

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.

ஆசிரியர் குழுவில் இணையலாம்

ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்ளவும்
9444228203

சிந்தனை, செயல்பாடு இவைகளையே விரும்புகின்றது. இங்குதான் மதங்கள் அனைத்தும் சரியாய் வளருகின்றன.

●●●

கடவுள் எங்கும் தானியத்தைப் போன்று இரைந்து கிடக்கின்றான். அப்படி உள்ளவனின் பெயரே 'சர்வ வல்லமை' படைத்தவனாகும். அவன் எங்கும் எதிலும் இருக்கிறான். இத்தகைய கருத்துள்ள வார்த்தைகளை கொண்ட அவன் தானாகவே இயங்கும்போது தன்னை மனிதன் அறிய ஆண் பெண் அனைவரையும் சேர்த்து மதங்கள், மதப்புத்தகங்கள், மதபோதனைகள் இவைகளையும் அவன் விரும்புகிறான். ஒரு மதத்தை போதிக்கத்தான் வேண்டும். அதிலே பேரழகு இருக்கின்றது. ஆனால் ஒரே ஒரு மனிதனின் பிரச்சாரம் மட்டும் இயங்க வேண்டும் என்ற கட்டளையும், ஒருமனிதனின் கட்டளைகள் என்ற நிலைக்கு மட்டும் போதாது. அது அனைவரையும் போய் சேராது. வெகுநாட்கள் நிலைக்காது. கடவுள் ஒரு வளர்ந்த ஆலமரத்தைப் போன்றவன். அவனுக்கு நூற்றுக்கணக்கான விழுதுகள் உண்டு.

●●●

கடவுள் என்றால் என்ன என்று கேள். இது ஒரு விவாதம் செய்கின்ற தன்மையா? அல்லது தத்துவ விளக்கமா? கடவுள் என்பது அதை உணர்த்த மனிதன் குறிப்பாக சொல்லிய ஒரு கொள்கை யாகும். இக்கருத்தை அனைவரும் நம்பும்படியாய் எப்படி சொல்வது என்பதற்கே பல வழிகள் தோன்றின. இதுவே எது விளக்கம். குறிப்பாக உனக்கு சொல்லுகிறேன். நீ தண்ணீரில் நீந்த விரும்புவாயே ஆனால் நீச்சலைப் பற்றி எப்பொழுதும் படித்துக் கொண்டே இருக்காதே. உடனே தண்ணீரில் குதி, கற்றுக்கொள். இதுதான் வழி.

●●●

தண்ணீரில் குதித்தவுடன் நீ மீனைப் போன்று முழுகி முழுகி எழுந்திருக்கலாம். இதுபோலத்தான் மதக்கடலும். தண்ணீரில் இருந்து தான் நீச்சலைக் கற்றுக் கொள்ள வேண்டும். மதவாதியாய் இருந்துதான் கடவுளை அனுபவிக்க வேண்டும். இத்தகைய முறையில் இறைஉணர்வை உணரும் மார்க்கம் புதையலாய் உள்ளது.

●●●

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

ஆன்மிகமலர்
மெயில் புக்



# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க










## aanmeegamalar.com

## இணையதளத்தை

## பார்க்கவும்









# நட்சத்திரத்திற்குரிய தொழிலில் சாதிக்கலாம்



பல மரம் கண்டவன் ஒரு மரத்தையும் வெட்ட மாட்டான் என்பார்கள். பல தொழில்கள் செய்து பார்த் தாச்சு.. ஆனால், எந்த தொழிலுமே கை வரலை..

லாபம் வரலைன்னா கூட பரவாயில்லை.. தொழிலைக் கத்துக்கிட்டோம்னு நெனைச்சுக் கலாம், போட்ட முதலீடே கடல்ல கரைச்ச பெருங்காயமா போச்சு என்று புலம்புபவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள்.

தொழில் செய்யறதுக்கு எல்லாம் தனியான திறமை வேணும் என்று இடித்துக் காட்டு பவர்களும் இருக்கிறார்கள். அவரவர் நட்சத்திரத் திற்கு ஏற்ற தொழில் செய்து பாருங்க.

உங்கள் நட்சத்திரத்திற்கு ஏற்ற தொழில் எது என பார்க்கலாம் வாங்க.

சுய ஜாதகத்தை பார்த்து தொழில்காரகணை கணித்து சொல்வோரும் உண்டு. அதனால், இதில் உள்ள தொழிலைத் தேர்ந்தெடுக்காதவர்கள், வருத்தப்பட தேவையில்லை. உங்களுடைய சுய ஜாதகத்தின் தொழில்காரகணை வைத்தும் தொழிலைத் துவங்கலாம்.

இந்த தொழில்கள் தான் குறிப்பிட்ட நட்சத்திர காரர்களுக்கு ஏற்றம் தரும் என்பதல்ல. இது சம்பந்தமான தொழில்கள் அவர்களுக்கு எளிதில் வசப்படும் என்பது தான். சம்பாதிப்பதில் எல்லோருக்கும் ஆசையும் ஆர்வமும் உண்டு. ஆனால் விரும்பிய துறையில் பணிபுரியும் வாய்ப்பும் யோகமும் ஒரு சிலருக்கே அமையும்.

இந்த துறைகளில் முயற்சிக்க எளிதாக முன்னேற்றம் பெற்று தொழிலில் பெரும் லாபம் பெறலாம். ஆனால் அவரவர் சுய ஜாதகத்திற்கேற்ப சிலருக்கு பலன்களும், துறை களும் வேறுபடலாம்.

## அஸ்வினி

காவல்துறை, மருத்துவம், ரயில்வே, வணிகர்

## பரணி

இசை , விளையாட்டு, வெள்ளி , கால்நடை மருத்துவர், ஹோட்டல்

## கார்த்திகை

ராணுவம், காவல்துறை, மருத்துவம், கப்பற்படை, பாதுகாப்புத் துறை நடனம்

## ரோகிணி

ஹோட்டல், மோட்டர் வாகனம், திருமண தரகர், வியாபாரி

## மிருகசிரீஷம்

இசை, தையல்காரர், ஆடை வடிவமைப்பாளர், டாக்ஸி ஓட்டுனர்

## திருவாதிரை

சேல்ஸ் மேன், புத்தக வியாபாரி, தபால், தந்தி பணியாளர், போக்குவரத்துத் துறை

## புனர்பூசம்

பத்திரிக்கை, எடிட்டிங், வக்கீல், பேராசிரியர் , ஜோதிடர்

பூசம்

கடற்படை, கப்பலில் வேலை, எஞ்ஜினியர், ப்ளம்பிங்

## ஆயில்யம்

ஆடிட்டர், ட்ராவலிங் ஏஜெண்ட், ஜோதிடம், எழுத்தர்

### மகம்

காண்ட்ராக்ட், லாயர், மருத்துவம், அரசுத்துறை, ஆபரணத் தயாரிப்பு

### பூரம்

அரசு வேலை, இசை, விளையாட்டு, ஆட்டோமொபைல் , புகைப்படக்கலை,

### உத்திரம்

காண்ட்ராக்டர், விரிவுரையாளர், தகவல் தொடர்பு மற்றும் கல்வித் துறை.

### ஹஸ்தம்

ஷிப்பிங் – கிளியரிங், டெக்ஸ்டைல், பொறியாளர், வக்கீல்

### சித்திரை

லாயர், விஞ்ஞானி, கூட்டுத் தொழில், வானொலி, தொலைக்காட்சி

### சுவாதி

ஆட்டோமொபைல்ஸ், போக்குவரத்து, எக்ஸரே, விஞ்ஞானிகள், நீதிபதி,ஆடை வடிவமைப்பாளர்

### விசாகம்

ட்ராவலிங் ஏஜண்ட், ஏர் ட்ராவல், கஸ்டம்ஸ், ஆடிட்டர்

### அனுஷம்

பொறியாளர், நடிகர், ஆயில் என்ஜின் மற்றும் வியாபாரி,பல் மருத்துவர்

### கேட்டை

கெமிக்கல் இன்ஜினியர், பிரஸ், பதிப்பாளர், விளம்பரத்துறை, இசைக்கருவிகள் தயாரிப்பாளர்கள்.

### மூலம்

வக்கீல், மத போதகர், மருத்துவர், பேச்சாளர், பலசரக்குக் கடை

### பூராடம்

வட்டித் தொழில், கேஷியர், கணக்காளர், ஏர் டிராவல் ஏஜெண்ட்ஸ், போக்குவரத்து, இசை, உணவு விடுதிகள்

### உத்ராடம்

இன்ஜினியர் , காண்ட்ராக்டர், நீதிபதி, எக்ஸ்போர்ட் ப்ரமோஷன், கஸ்டம்ஸ்.

### திருவோணம்

நிலக்கரி, விவசாயி, உயர்பதவிகள் மற்றும் டிரஸ்ட்.

### அவிட்டம்

இன்ஜினியர், தொழில்துறை, காவல்துறை, இராணுவம், தகவல் தொடர்பு, பிரஸ் மற்றும் தொலைபேசித் துறை

### சதயம்

விஞ்ஞானி, விமானப் பயணங்கள், வானசாஸ்திரம், ஜோதிடம் .

### பூரட்டாதி

ஆசிரியர், மருத்துவம், அரசியல்வாதி, லாயர்

### உத்திரட்டாதி

பொறியாளர், பரம்பரைத் தொழில், மருத்துவமனை, நீர்மூழ்கி கப்பல், குடை, மழைக் கோட்டு தயாரிப்பாளர்

### ரேவதி

எடிட்டர், மதத் தலைவர், சட்டம், சிவில் இன்ஜினியர் , விளம்பரத்துறை, ஜோதிடர், பதிப்பாளர்கள்


எலக்ட்ரானிக்ஸைக் கற்றுக்கொள்ளவும் அல்லது எலக்ட்ரானிக்ஸைப் பற்றிய தங்களின் அறிவைப் புதுப்பிக்கவும், யூடியூப்பிலுள்ள @t.vijayarangan என்கின்ற சேனலைப் பார்க்கவும்.








பாரம்பரியமான,
சத்தான, சுவையான
சமையல் குறிப்புகளை
மிக எளிமையாகவும்,
தெளிவாகவும் அறிந்து கொள்ள

**கீதாசமையல்**
(geetha samayal)
youtube சேனலை பாருங்கள்




geetha samayal வீடியோவை பார்த்து
Like, Share, Subscrib செய்யுங்கள்

# சுக துக்கத்தை சமநிலையில் வைக்க உதவும் மனக்கட்டுப்பாடு

## மனதை திறப்போம் மாயையை அழிப்போம்

மனதினை அடக்கினால்அனைத்திலும் சாதிக்கலாம் என்பதால்தான்ஆன்மிகத்தில் நுழையும்போது இதற்கான பயிற்சியினை அவசியம் செய்யவேண்டும் என்று கூறுகின்றனர்.

எந்த ஒன்றையும் நம் மனதிற்குள் ஊடுருவ வைக்கும் சக்தி மாயைக்கு அதிகம் உள்ளது. இந்த மாயை என்பது எது என்பதில் அறிந்து கொள்வதில்தான் பலர் தோற்றுவிடுகின்றனர்.

கண்ணுக்கு தெரியும் அனைத்தும் உண்மையில்லை, இவ்வாறு உண்மை யில்லாத, அனைத்தும் மாயை என்று கூறிவிட முடியாது.

மாயை மனிதனை தன் வயப்படுத்தும் சக்தி படைத்தது. இதனால்தான் அந்த மாயையை வைத்தே நம் மனதை எளிதாக அமைதிபடுத்தி, மாயையிலிருந்து விடுபட பல்வேறு சித்தர்கள், ஞானிகள், யோகிகள் முற்படுகின்றனர்.

இறைவன் என்பவன் யார் என்று கேட்டால், ஏதும் இல்லாத பரம்பொருளே இறைவன் என்று யோகிகள் கூறிவிடுவார்கள், இந்த ஏதும் இல்லாத பரம்பொருளை அறிந்து கொள்ள நாம் முதலில் முற்படவேண்டுமானால் ஏதுமில்லாதவனுக்கு ஏதாவது ஒரு உருவம் கொடுத்து வழிபட ஆரம்பிக்கவேண்டும்.

இதனால்தான் ஆதிகாலத்தில் நமது குருமார்கள், முதலில் கோவிலுக்கு சென்று இறைவனை வழிபட வலியுறுத்தினர், இதற்கு அடுத்த படியாக வீடுகளில் பூஜை செய்ய அறிவுறுத்தினர்.

இதற்கு அடுத்த அடுத்த படிகளாக, அபிஷேகம், ஆராதனை, பஜனை, வேத மந்திர பாராயணம், என்று படிப்படியாக ஆன்மிகப் பாதைக்கு மக்களை அழைத்துச் சென்றனர்.

இவ்வாறு அழைத்துச் செல்லும்போது கடைசி நிலையில் இறவன் என்பவன் ஏதுமற்ற பரம்பொருளாக இருக்கிறான் என்பதை முடிவாக கூறிவிடுகின்றனர்.

சரி இதுவரை நாம் கடைபிடித்த அனைத்தையும் என்ன என்று கூறுவது, இவை அனைத்தையும் மாயை என்று கூறிவிடலாமா என்று கேட்டால், மனிதப் பிறவியின் நோக்கத்தை அறிந்து, மனதை கட்டுக்குள் கொண்டு வந்து, இறைவனும் நானும் வேறு வேறு அல்ல என்பதை உணர்ந்தவனுக்குத்தான் மேற்கண்ட பூஜை புணஸ்காரம் அனைத்தும் மாயையாக தோன்றும்.

இறைவனுடன் தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்ளும் மனோ நிலை வராத வரை இவைகளை





நாம் மாயை என்று அழைக்கக் கூடாது.

ஏனென்றால் இந்த மாயைகள்தான் நம்மை ஒரு கட்டத்தில் இறைநிலையின் உச்சத்திற்கு அழைத்துச் செல்லும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

அதுவரை முழு மனதுடன் அபிஷேகம், பூஜை, ஆராதனை, பஜனை, வேதமந்திர பாராயணம் போன்றவற்றை அவசியம் கடந்து செல்ல வேண்டும்.

தொடர்ந்து மேற்கண்டவற்றை செய்யும்போது மனம் ஒரு இடத்தில் நிலை பெறும்போது இறைவனுடன் ஐக்கியமாகிவிடலாம்.

சுருக்கமாக சொல்ல வேண்டுமானால் நம் மனமெனும் குதிரையை கட்டுப்படுத்த உதவுபவை தான் மேற்கண்ட பூஜை புனஸ்காரங்கள்.

ஒரு சிலருக்கு இந்த மனக்கட்டுப்பாடு என்பது பூர்வஜென்மத்துடன் தொடர்ந்தும் வரும். இதுபோன்றவர்கள் பூர்வஜென்ம பலனால், விட்ட குறை, தொட்ட குறைக்கு ஏற்ப தங்கள் வாழ்க்கை முறை, செயல்முறை அமைந்தாலும், ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் இறைநிலையுடன் தொடர்புடையவராக மாறிவிடுவார்கள்.

உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால், ஒரு குழந்தை பள்ளிப்பருவம், கல்லூரிப் பருவங்களை கடந்தபின்பே பட்டம் பெற்று, ஒரு மருத்துவராகவோ, இன்ஜினியராகவோ முடியும்.

இதற்காக அவர்கள் தங்கள் வயதில் குறிப்பிட்ட காலத்திற்கு பள்ளி, கல்லூரிகளில் பயின்று, பின் ஒரு குறிப்பிட்ட இடத்தில் செயல்முறைகளில் தேர்ச்சிபெற்றால்தான், அவர்கள் படிப்பு முழுமை பெறும்.

இதுபோன்றவர்கள் ஒருசில கண்டுபிடிப்புகள், சாதனைகளை எளிதாக செய்ய அவர்கள் படித்த படிப்பு உதவும்.

ஆனால் இந்த படிப்பு என்ற சமாச்சாரம் ஏதும் அறியாத ஒருசிலர், புதிய புதிய கண்டுபிடிப்புகளை நிகழ்த்துவார்கள், புதிய புதிய அறிவியல் தொழில் நுட்பங்களுக்கு விளக்கம் கூறுவார்கள்.

இது எப்படி சாத்தியம்?

இதுதான் பூர்வ ஜென்ம கர்மா, நாம் ஒரு செல்போனை பயன்படுத்தும்போது, ஒரு மலைப் பிரதேசத்திற்கு செல்லும் வாய்ப்பு அமையும்போது, மலை அடிவாரம் வரை மற்றவரைத் தொடர்பு கொள்ள முடியும், ஆனால் மலையின் உச்சிக்கு






மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர்
மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்


செல்லச் செல்ல செல்போனில் சிக்னல் கிடைக் காத காரணத்தால், விலைஉயர்ந்த செல்போன் கையில் இருந்தாலும், யாருடனுடம் பேச முடியாது.

இதுபோலத்தான் மேற்கண்டவர்களின் கர்மா அவர்களின் இப்பிறப்பில் வந்தாலும், அவை பயனற்று கிடக்கும், அதனால் அவர்கள் கல்வி அறிவி பெறாதவராக, அறிவிலியாகவே மற்றவர்களின் கண்களுக்குத் தெரிவார்கள்.

மலைஉச்சியில் சென்றவன் மலைச் சரிவில் வேறு ஒரு இடத்தை கடக்கும்போது அங்கு சிக் னல் கிடைக்கும், அவரால் மற்றவருடன் தொடர்பு கொள்ள முடியும்.

இதைப்போன்று நம் கண்களுக்கு மஞ்ச மாக்கானாக விளங்கும் ஒருசிலரின் கர்மா அவர்களுக்கு பலனளிக்கும் சமயத்தில் அவர் கள் படிப்பறிவில்லாமல் இருந்தாலும், மொழி அறிவு இல்லாமல் இருந்தாலும் அவர்களை சாதனையாளராக மாற்றி காட்டும்.

இந்த இடத்தில் படிப்பும், படிப்பறிவின்மையும்



ஒருவித மாயையாகவே பார்க்க வேண்டும்.

www.aanmeegamalar.com

இந்த மாயையை மனம் முழுவதும் அறிந்துக் கொள்ளும் போது குரங்கு போன்று தாவித்திரியும் மனம் மனிதருக்குள்ஒடுங்க ஆரம்பிக்கும், அந்த ஒடுக்கம்தான் நம்மை இறைவனுடன் ஒன்றி னைக்கும்.

இந்த மன ஒடுக்கம் நிகழப்பெற்றால், உடல் ஒரு புனிதத்தை அடைந்துவிடும், இந்த உடலும் சுக துக்கத்தை பிரித்து பார்க்க முடியாமல் ஒரு ஜடமாக மாறி மன ஒட்டத்திற்கு கட்டுப்பட்டுவிடும்.

இதனால்தான் அக்காலத்தில் சித்தர்கள் இந்த உடலை சட்டையைப் போன்று கழட்டி வைத்து, பல்வேறு லீலைகளை அரங்கேற்றி யுள்ளனர்.

இந்த உடல் சுகத்தை தேட மனம் ஒத்துக் கொள்ளாது, இந்த மன ஒடுக்கத்தை அடைந்த ஞானிகள், மகான்கள், சித்தர்கள் யாரும் சொகுசான வாழ்க்கையை வாழ்ந்திருக்க மாட் டார்கள். குப்பையில் உட்காருவார்கள், கிழிந்த கந்தலை உடுத்துவார்கள், பசியை ஆட்கொள்ள விடமாட்டார்கள்.

மன ஒடுக்கம் அடைந்த ஒருசிலர் இந்த உடலை ஒரு வாகனமாகப் பயன்படுத்துவார்களே தவிர, உடல் சுகத்திற்காக பயன்படுத்த மாட்டார்கள், இதனால்தான் பல்வேறு மகான்கள், சித்தர்கள் ஒரே நேரத்தில் பல்வேறு இடங்களில் காட்சி கொடுத்த அதிசயங்கள் நிகழ்ந்துள்ளன.

இவற்றிற்கெல்லாம் மூல ஆதாரமாக விளங்கு வது மனமெனும் குரங்கை கட்டுப்படுத்த வழியை கண்டுபிடிப்பதுதான்.

இந்த குரங்கு பூஜையால் கட்டுப்படுகிறதா, அபிஷேகம் செய்யும் போது கட்டுப்படுகிறதா, பஜனை பாடும்போது கட்டுப்படுகிறதா, வேத மந்திரம் உச்சரிக்கும்போது கட்டுப்படுகிறதான என்பதை அறிந்து கொண்டால் போதும், அந்த செயலை செய்யும்போது தியானத்தையும் யோகத் தையும், இணைத்து செய்யும்போது நம் மனம் கட்டுக்குள் வரும், சுக துக்கத்தை சமமாக பாவித்து இறைநிலை அடைய உதவும்.

பாதையைதேடி.
போன்: 9444228203

Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.
Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.
Website: www.aanmeegamalar.com / E-mail: aanmeegamalar@gmail.com

# விருப்ப சந்தா செலுத்த










விருப்ப சந்தா

UPI மற்றும் வங்கி
வாயிலாகவும்
சந்தா செலுத்துங்கள்...

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**